REGD M. 6642

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ ,, 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 29—5—49 | இதழ் 48

# “இரமண விஜயம்”

[இரா. நெடுஞ்செழியன்]

“குடிக்கவும் நீரற் றிருக்கும் —
ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல்,
கோடுந்தடி யர்க்கு
மடங்கட்டி வைத்ததி னாலே
— தம்பி!

வசங்கெட்டுப் போனது நமது
நன்னாடு”

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், நாட்டுப் பெருங்குடி மக்களைப் பார்த்து அறிவுரை பகன்றார். ஆனால், இந்நாட்டில் அறிவை அடகு வைப்போர். இன்னும் ஏராளமாக இருந்து வருகின்ற காரணத்தால், மாடுகள் வழக்கத்தால் செக்கைச் சுற்றி வருவது போன்று, வழக்கத்தால் செய்யப்படும் மூடச் செயல்கள் பலவும், இன்னும், இங்கு நடைபெற்றவண்ணம் இருந்து வருகின்றன.

அண்மையில், திருவண்ணாமலையில் பாதாள லிங்கக் கோயில் திறப்பு விழாச் செய்யப்பெற்றதை அனைவரும் அறிவர். அதன் திறப்பு விழா வாற்றும் ‘அரும்பணியை’ச் செய்து முடிக்க, அனைத்திந்திய ஆட்சியின் அரியணை மீதேறி, எட்டுத் திக்கும் எட்டக் கோலோச்சிவரும் கோமான், ‘சக்ரவர்த்தி’ ராஜகோபாலாச்சாரியார் வருகை தந்திருந்தார். உலகிலுள்ள மற்ற நாட்டிலுள்ள ஆட்சித் தலைவர்களுக்கு, உலக மாநாட்டில் கலந்து கொள்ளல், அணு ஆராய்ச்சி சாலையைத் துவக்கி வைத்தல், பல்கலைக் கழகங்களைத் திறந்து வைத்தல், பெருந் தொழிற்சாலைகளைத் தோற்றுவித்தல், வெற்றி விழாக்களிலே கலந்துகொள்ளல் போன்ற நற்பெருஞ் செயல்களிலே ஈடுபடுவதும், மற்ற வேலைகளிலே ஆட்சி அலுவல்களைக் கவனிப்பதும் ஆன செயல்களைத் தவிர, வேறு செயல்களிலே சிந்தனை செலுத்தவும் நேரமிருப்பதில்லை. இந்திய கவர்னர் ஜெனரலுக்கோ எனின், ஹனுமான் கோயிலில் விசேஷப் பிரார்த்தனை நடத்துதல், விஞ்ஞான முறையில் செய்யப்பட்ட கப்பலை நீரில் மிதக்க விடத் தேங்காயை உடைத்தல், அடையாற்றுத் தோட்டத்திலே மாஞ்செடி நட்டு நீர் வார்த்தல், இரமணர் ‘தவம்’ புரிந்த இடத்தில் கட்டியுள்ள கோயிலைத் திறத்தல் போன்ற வேலைகள் ஏற்பட்டுவிடுகின்றன! வேறு அவசிய அரசியல் வேலை ஏதும் இல்லை என்பது காரணமோ அல்லது அவைகளைவிட இவைகள் முக்கியமானவை என்று கருதுவது காரணமோ; ஏதோ ஒன்று! அறியோம் ‘பராபரமே’!

பாதாள லிங்கக் கோயிலில் இரமணர் ‘தவம்’ புரிந்தாராம். அதனால் அதற்கு மகத்துவம் ஏற்பட்டுவிட்டதாம். அந்த மகத்துவத்தை [illegible] நாட்டும் திருப்பணியே இப்பொழுது நடைபெற்ற கோயில் திறப்பு விழாவாம்!

யார் இந்த ரமணர்? யாரோ வெங்கட்டராமன் என்ற பார்ப்பனச் சிறுவனும். வீட்டிலுள்ளோரிடம் வெறுப்புக் கொண்டு வெளியேறினனும். வெறுப்பு கோவணண்டியாக ஆக்கிற்றும். கோவணண்டி, பாதாளலிங்கக் கோயிலில் குந்தினராம். தவம் புரியத் தொடங்கினராம். பக்தியின் ‘சிறப்பை’ மெச்சி ஆடவரும் பெண்டிரும் திரண்டார்களாம். விதவையரும் வாழ்க்கையில் விரக்திகொண்டு வந்து சேர்ந்தனராம். ‘யோகம்’ பலமாக நடைபெறத் தொடங்கிற்றும். பக்தகோடிகளால் காணிக்கைகள் பலவும் செலுத்தப்பட்டதாம். பொன்னும் பொருளும் குவிந்ததாம். பின் ஆச்சிரமம் அரண்மனையாயிற்று. இராமன் இரமணரானர்!

அண்ணன் வெங்கட்டராமன் மடங் கட்டி வாழ்வதைக் கேள்விப்பட்ட தம்பி, மடத்தின் அலுவல்களைக் கவனிக்க, மடத்திற்குச் சர்வாதிகாரியாக வந்தாராம். அண்ணன், மடத்துச் சொத்துக்களை எல்லாம், தம்பியின்மீது கொண்டுள்ள பாசம் எந்தவிதத்திலும்

அறுபடாமலிருக்க வேண்டி, தம்பியின் பெயருக்கு எழுதிவைத்தாராம். மக்கள் தன்னைப்பற்றி சந்தேகப்படக்கூடாதென்று, தம்பி தன்னை சுவாமி நிரஞ்ஞானந்தர் என்று யாவரும் அழைக்கும்படி செய்தாராம். பிராமணோத்தமர்களுக்குச் சாப்பாடும், மற்றும் பல காரியங்களும் யாதொரு குறைவுமின்றி அன்றாடம் நிறைவேறி வருகிறதாம். இதுதான் 'இரமண 'விஜயம்'!

இப்படிப்பட்ட 'இரமண விஜயத்'தின் மகிமையெல்லாம், இரமணரோடு பலகாலம் உடன் உறைந்து, அவருக்குப் பிரதம சீடராக இருந்து, பல ஆண்டுகள் பணியாற்றி, 'அவர் உள்ளெண்ணம், நடவடிக்கை எல்லாம் அறிந்து, வெளியேறியுள்ள பெருமாள் சாமியார் என்பவர் வெளியிட்டுள்ள சிறு நூல்களின் வாயிலாக நன்கு அறியக் கிடக்கின்றன. இந்தப் பெருமாள் சாமியார் இன்னும் இறந்துவிடவில்லை, அதே திருவண்ணாமலையில்தான், தனிமடத்தில் வாழ்ந்து வருகிறார்.

இந்த இரமண 'ரிஷி'யால், நாட்டுக்கு இதுவரையில் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா? இல்லை! அப்படி ஏற்பட்டிருக்கிறது, என்று எந்த சாதனையைக் காட்டியாவது, யாராலும் நிரூபிக்கத்தான் முடிகிறதா? அதுவும் இல்லை! இரமணருக்கு முன் இருந்த 'உலகம்', இரமணரின் கலப்பால் எந்தவிதத்திலாவது மாறி முன்னேறியிருக்கிறதா? அதுவும் இல்லை! ரிஷிகளல்லாத சாதாரண அரசியல் தலைவர்களாலும், அறிஞர்களாலும், விஞ்ஞானிகளாலும், வீரர்களாலும் இந்த நாட்டில் சாதிக்க முடிந்தவற்றில், ஒரு பகுதி சேவையையாவது, மனித சமுதாயத்துக்கு இரமணரால் ஆற்ற முடிந்ததா? குண்டூசி கண்டு பிடித்த விஞ்ஞானியால் உலகிற்கு ஏற்பட்டுள்ள நன்மையில் ஆயிரத்திலொரு பங்கு நன்மையையாவது இரமணர் ஆற்றியிருப்பாரா? இப்படியெல்லாம் கேட்டால், இப்படிக் கேட்பதே 'கடவுளின் லீலை' என்கிறார் ஆச்சாரியார்!

இப்பேர்ப்பட்ட 'சர்வ வல்லமை படைத்த ரிஷிகளை'க் கண்டுதான் புரட்சிக் கவிஞர் கேட்கிறார்,

"கடவுள் துவக்கிக் கொடுத்த
—பல
கவிதைகள், பதிகங்கள் செப்
பியோர்கள்,
கடவுள் புவிக்கவதாரர்—
அந்தக்
கடவுளின் தொண்டர்கள்,
லோக குருக்கள்
கடவுள் நிகர் தம்பிரான்கள்—
ஜீயர்,
கழுகொத்த பூசுரர், பரமாத்து
மாக்கள்
கடவுள் அனுப்பிய தூதர்—
வேறு
கழுதைகளிலும் மக்கள் கண்ட
துண்டோ?"

என்று. விடை கூறுவோர் இல்லை! ஆனால் அவற்றிற்குச் சார்பாக விவேகமற்ற செயல்கள் புரியும் வீணர்கள் இருக்கிறார்கள்!

சாதாரண மக்களைக் காட்டிலும் மீறிய வல்லமை படைத்த இந்த 'முனிவரால்', தன்னையாவது நோய், நொடி, மூப்பு, ஆகியவற்றிலிருந்து காப்பாற்றிக்கொள்ள முடிகிறதா? சாதாரண மக்கள் நாடும் சாதனங்களைத்தான், 'சர்வேஸ்வரனின் கடாட்சம்' பெற்று விளங்கும் சத்ஞானஜரும் தேடுகிறார். இரமணரின் தம்பியாரிடம், 'ரிஷி'யின் உடல்நிலை பற்றி ஆச்சாரியார் வினவினாராம். அதற்கு அவர், "மஹரிஷிக்கு இப்பொழுது வல்து கை சிறிது சரியாக இல்லை. டாக்டர்கள் இந்த நோய் சீக்கிரத்தில் குணமடைந்து விடுமென்று உறுதி கூறியுள்ளார்கள்", என்று கூறினாராம். தனக்கு நோய் வராமல் தடுக்கவும் ரிஷியின் 'மகத்துவம்' பயன்படவில்லை; வந்த நோயைப் போக்கிக் கொள்ளவும் அந்த 'மகத்துவத்தால்' முடியவில்லை! ஆங்கில வைத்தியம் கற்றுத் தேர்ந்த டாக்டர்களின் உதவியைத்தான் அந்த 'மகாத்மா' நாடுகிறது!

மனிதன் வேண்டி நிற்கும் அன்றாட இன்றியமையாத தேவைகளில், ஏதேனும் ஒன்றை, 'மஹரிஷியால்' புறக்கணிக்க முடிந்ததா? அல்லது மனித சக்திக்கு மீறிய செயல் ஏதேனும் அவரால் ஆற்றத்தான் முடிந்ததா? முடியுமா? திருவண்ணாமலையில் அவர் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆச்சிரமத்தில் அவர் ஆற்றியுள்ளதாக, அறிவற்ற மக்களிடையே பரப்பப்பட்டுவரும் அதிசயங்களெல்லாம், எந்த அளவுக்குப் பொய்யாகப் புனைந்துரைக்கப்பட்டனவாகும் என்பதை, அவரோடு பல்லாண்டு பழகிய பெருமாள் சாமியார் வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார். ஆச்சிரமத்தில் நடைபெறும் இழிசெயல்கள் எந்த அளவுக்கு மிக்கோங்கி நிற்கின்றன என்பதையும் பெருமாள் சாமியார் தெள்ளத் தெளியப்புட்டு விளக்கியுள்ளார். சாமியார்களின் குட்டுகள் சாமியாருக்குத் தானே தெரியும்!

முற்றுந்துறந்த முனிவருக்குப் பொன் ஏன்? பொருளேன்? மடமேன்? மாளிகைகள் ஏன்? பட்டமேன்? பரிவாரமேன்? மணிமண்டபங்கள் ஏன்? மங்கையர் கூட்டம் ஏன்? சொத்து ஏன்? சுகமேன்? மண் ஓட்டையும், செம்பொன்னையும் ஒக்க நோக்கும் பண்புடையவராகவல்லவோ அவரிருக்கவேண்டும்! வையகத்தைப் பாயாகவும், வானகத்தைக் கூரையாகவும் அல்லவோ அவர் பாவிக்கவேண்டும்! கையைத் தலைக்கணைத்துப் படுப்பதே சுகந் தேடும் பண்பாகும் என்று யாரோ பெண்கள் சுட்டிக்காட்டியபொழுது, அந்தச் சுகத்தையும் அப்பொழுதிருந்து இழந்துவிடச் சம்மதித்தாராமே பட்டினத்தார்; அதுபோல, இக சுகத்தை இழந்தவராகவல்லவோ இருந்திருக்கவேண்டும் முற்றுந் துறந்தவராகக் கருதப்படும் 'முனிபுங்கவர்'! அல்லது சாதாரண துறவிகளுக்கு, விதிக்கப்பட்டிருக்கும் விதிகளான 'பசித்தால் புசி; வியர்த்தால் குளி' என்ற கோட்பாட்டோடாவது நின்றாரா? அப்படியும் சாதாரணமாக இவரைப் பொறுத்து எண்ணிவிடக் கூடாது, இவரோ சாதாரணத் துறவு நிலைகளையும் தாண்டி, சர்வேஸ்வரனின் வரப்பிரசாதம் பெற்று நிற்கும் 'சர்வஞானி' யாவார்! இப்படிப்பட்டவரைச் சூழ்ந்துதான் இக சுகங்கள் தாண்டவமாடுகின்றன!

எதையும் சாதிக்காத—புதிய தத்துவம் எதையும் எடுத்துக் கூறாத—யாருக்கும் பயன்படாத—உணவை உண்டு உடலைப் பெருக்கும், சாதாரண மனிதனுக்கும் தனக்கும் ஆற்றலில் வேறுபாடு காட்டாத ஒரு கோவணாண்டி! அந்தக் கோவணாண்டியின் மகத்துவத்தைக் காட்டும்

கோயிலாம் பாதாள லிங்கம்! அதற்குத் திறப்பு விழாவாம்! அதை ஆற்றிவைக்க கவர்னர் ஜெனரலாம்! என்னே கூத்து! அறிவுலகம் அந்த அளவுக்குப் பழிக்கப்படுகிறது, உதவாக்கரைப் பழைமைக் கொள்கைப் பற்றுக்கோடர்களால்!

கவர்னர் ஜெனரல்! பின்னே கவர்னர்! அவர் பின்னே மகாராணியார்! படைவரிசைகள்! பரிவாரங்கள்! பக்தகோடிகள்! மந்திரிகள்! தந்திரிகள்! எடுபிடிகள்! எல்லாவற்றையும் பற்றிப் பாராக்குக் கூற, ஏடுதாங்கிகள்! இவையெல்லாம் எதற்கு? யாரோ வீட்டை வெறுத்த ஒருவன் குந்தித் 'தவம்' கிடந்த இடத்தைச் சிறப்பிக்க! எவ்வளவு அவசியமான—அவசரமான — அற்புத நிகழ்ச்சி பாருங்கள்!

பாசம் அறுத்த 'முனிபுங்கவருக்குப்' பக்தகோடிகள் காட்டும் மரியாதை இந்த அளவோடு நின்றுவிடக் கூடாதாம். "அவர் பிறந்த, கல்வி பயின்ற, தபஸ் செய்த, தற்சமயமிருக்கும் இடங்களையெல்லாம், புனித ஸ்தலங்களாக்கிவிட வேண்டுமாம்." இப்படிக் கூறுபவர் யார்? பெரோஸா தலையார்கான் என்ற பெருமாட்டியார்! அவ்வளவு அன்பு இரமணரின் 'மகத்துவத்' தின்பால்! அவர் விருப்பப்படி வேறுபல விழாக்கள் கொண்டாடப்பட்டாலும், நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை, காரணம் 'ஜீர்ணோத்தாரணம்' செய்வதற்கு ஓமந்தூரார்கள் இருக்கிறார்கள்; அவைகளைத் திறப்பு விழாவாற்றி வைக்க ஆச்சாரியார்கள் இருக்கிறார்கள்!

அன்பர் ஆச்சாரியார் கோயிலை மட்டும் திறந்துவைக்கவில்லை; வாய் திறந்தும் சில சொல்லியிருக்கிறார். அங்கு கூடியிருந்தோர் அனைவரும் அடையவேண்டிய தொன்றை அவர் வற்புறுத்தியுள்ளார். அனைவர்க்கும் நுண்ணறிவு வேண்டும் என்பதை உணர்கிறார்; நாமும் ஓரளவுக்கு அங்கு கூடியிருந்தோர் அனைவர்க்கும் அது ஏற்படவேண்டும் என்றுதான் எண்ணுகிறோம். "நமக்கு நுண்ணறிவைக் கொடுக்கும்படி கடவுளிடம் பிரார்த்தனை செய்வதில் எல்லோரும் ஒன்றுபடுவோமாக" என்று அவர் அறிவுரை பகர்ந்துள்ளார். அங்கிருந்த பக்தகோடிகள் அனைவர்க்கும் நுண்ணறிவு வேண்டியது அவசியந்தான்; மேமிழந்தவாரியான அறிவைக் கொண்டிருக்கும் காரணத்தால் தான், மூடப்பக்தியை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை, நாம் அடிக்கடி உணர்த்தி வருகிறோம். ஆச்சாரியார் எண்ணுகிறார், வேண்டப்படும் நுண்ணறிவு, பிரார்த்தனையால் கிடைத்துவிடும் என்று. பிரார்த்தனை மூலமே நுண்ணறிவைப் பெற்றுவிட முடியுமென்றால், நுண்ணறிவு பெறுவதற்கென்று உலகெங்கும் ஏற்படுத்தியிருக்கும் கல்வி நிலையங்களும், கலைக் கழகங்களும், ஆராய்ச்சி சாலைகளும், அறிவகங்களும் தேவையில்லாமலே போயிருக்கும்! பிரார்த்தனை பண்ணிப் பண்ணிப் பார்த்தும் நுண்ணறிவு கிடைக்காத காரணத்தால்தான், உலக அரசாங்கங்களெல்லாம் அறிவுக் கூடங்களை நிறுவி இருக்கின்றன. நுண்ணறிவு பெற உலகியலை அறிய முற்படுவதுதான் முறையேயன்றி, பிரார்த்தனை பண்ணுவதில் பயனேதும் கிட்டாது என்பதை அறிந்துகொண்ட காரணத்தினுல்தான், சுயமரியாதைகாரர்கள் நுண்ணறிவு கொண்டோர்களாக விளங்குகிறார்கள்; மேலும் மேலும் நுண்ணறிவு வளரவேண்டி, உலகியலை அறியும் முறையையே சிறந்த முறையாகக் கைக்கொண்டுள்ளார்கள்.

திருவண்ணுமலையில் கூடியிருந்த பக்தகோடிகளுக்கு, என்னவோ, நுண்ணறிவு வேண்டியது அவசியந்தான்! ஆனுல் அந்த நுண்ணறிவு ஆச்சாரியார் கூறும் பிரார்த்தனையால் கிடைக்காது என்பதை அவர்கள் இப்பொழுது அறிவார்களா, பாபம்! ஆச்சாரியாரே அறிவுறுத்துகிறபடி, சுயமரியாதைக்காரர்களிடம் அன்பு செலுத்தி அவர்களுடன் பழகும் போதுதான் அறிவார்கள்! பிரார்த்தனையால் வாய்வலிக்குமே தவிர, காரியம் ஏதும் நிறைவேறாது—நிறைவேறியது கிடையாது. இது ஆச்சாரியாருக்குத் தெரியாதா என்ருல், தெரிந்திருக்கும், என்றுலும் மூடப் பழைமையை விட்டுவிடக் கூடாது என்ற கருத்திலே, ஏதோவொரு காரணம் பற்றி அவர் கொண்டுவிட்ட உறுதியான நம்பிக்கையின் பேரில்தான் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறார். வேண்டுமென்றே, வற்புறுத்தித் தீரவேண்டும் என்று, ஒருவர் 'ஏதோ நலன்' கருதித் துணிந்துவிட்டால், அவரைத் திருத்த அப்படிச் சொல்லவேண்டாம் என்று கூறி வெற்றிபெற முடியுமா? அறிவு ஒப்புக்கொள்ளாவிட்டாலும், சூழ்நிலை அவசியம் தூண்டும்போது, கொண்ட கருத்து கோணலென்றும் கூறித்தானே தீருவர்! அந்தப் போக்கை ஒட்டியதாக இருந்தாலும் இருக்கலாம், ஆச்சாரியார் பிரார்த்தனை செய்து நுண்ணறிவு பெற வேண்டும் என்று சொல்லும் கருத்தும். ஆனுல் நுண்ணறிவு பெறுவதற்கு வழி எது என்று தேடி அவர்கள் நம்மைச் சந்திக்கும்போது, "உலகியலைப் பலவகையிலும் பகுத்தறிவுக் கண் கொண்டு பார்" என்று சொல்லித் தரமட்டும் நாம் தவறமாட்டோம்.

மேலும் ஆச்சாரியார் சுயமரியாதைஇயக்கத்தைப்பற்றி, இரமணர் 'தவம்' புரிந்த இடத்தில் குறிப்பிட்டுள்ளார் சுயமரியாதை இயக்கத்தின் பண்பை வெளிப்படையாகப் புகழ்ந்து கூற ஆச்சாரியாருக்குக் கட்சி மாச்சரியம் தடை செய்கிறது போலும்! அப்படி இருப்பதும் இயற்கை தானே! ஆகவேதான் போலும், சுயமரியாதைக்காரர்களின் பண்பை மறைமுகமாக வெளிப்படுத்துகிறார். சுயமரியாதைக்காரர்கள் வைதீகர்களோடு பழகும்போது அன்பான முறையிலே பழகுகிறார்கள்; ஆனுல் வைதீகர்கள், சுயமரியாதைக்காரர்களைக் கண்டாலே வெறுப்புக் கொள்கிறார்கள்; நேர்மையாக நிற்க வெட்கப்பட்டு, மறைமுகமாகச் செல்ல எண்ணுகிறார்கள்; சுயமரியாதைக்காரர்களின் கூட்டங்களைப் பலாத்காரமுறையில் கலைக்க நினைக்கிறார்கள்; சுயமரியாதைக்காரர்களை மூர்க்கத்தனமாகத் தாக்க திட்டமிடுகிறார்கள். இந்தநிலைமையை ஆச்சாரியார் உணர்கிறார் போலும்! சுயமரியாதைக்காரர்கள் அன்புடன் பழகினாலும், வைதீகர்கள் துவேஷங் கொண்டே வாழ்கிறார்கள்! இது ஆச்சாரியாருடைய உள்ளத்தை உறுத்துகிறது. ஆகவே தான், வைதீகர்களுக்கு இதமான சொற்களால் புத்திகற்பிக்க வேண்டி, "சுயமரியாதை இயக்கத்தைக் 'கடவுளின் லீலை'களிலே ஒன்றாக நாம் கருதவேண்டும். இந்த மக்களிடம் நீங்கள் அன்பு செலுத்துவதையே நான் விரும்புகிறேன்" என்று கூறுகிறார். துவேஷம் காட்டுவதை

விட்டுவிடுங்கள், அன்பு செலுத்துவதையே கைக்கொள்ளுங்கள் என்னும் கருத்துப்படப் பக்த கோடிகளுக்கு அறிவுறுத்துகிறார்! சுயமரியாதை இயக்கம் 'கடவுளின் லீலை'களிலே ஒன்று; இது வைதீக உள்ளங்களில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆச்சாரியாரின் கூற்று! ஆகவே சுயமரியாதை இயக்கத்தைப் பழிப்பது—தூற்றுவது—பொய் புனைந்து புறங்கூறுவது — குற்றஞ் சொல்லுவது—குறைகண்டதாகப் புளுகுவது போன்ற செயல்களைப் பக்த கோடிகளும், வைதீகர்களும், ஆண்டவன் அடியார்களும், ரிஷீஸ்வரர்களும் மேற்கொள்வது, 'கடவுளின் லீலை'யையே பழிப்பதாகும். சுயமரியாதை இயக்கத்தைத் தூற்றுவது 'கடவுளை'யே தூற்றுவதாகும் என்பதை, ஆச்சாரியாரின் அடிப்பொடி ஆழ்வார்கள், இனியேனும் உணர்வார்களா?

ஆச்சாரியாரின் கூற்றுப்படிபார்த்தால், சுயமரியாதை இயக்கம், 'கடவுள்' இதுவரையில் புரிந்த 'லீலை'களில், கடைசியாகப் புரிந்துகொண்டிருக்கும் 'லீலை'யாகும். இதற்குப் பிறகும் 'லீலை' செய்வாரா கடவுள் என்பது, இப்பொழுதுபுரியும் 'லீலை' எந்த அளவுப் பயனைக்கொடுக்கிறது என்பதைப் பார்த்துக்கொண்டுதான் வேறோர் 'லீலை' புரிய முற்படுவார் என்று தோன்றுகிறது! ஆகவே 'கடவுளின் லீலை'யாகிய சுயமரியாதை இயக்கத்தைப் போற்றிப் புகழ்ந்து, காப்பாற்றி, வளர்க்க வேண்டிய பொறுப்பு, ஆச்சாரியாரின் தொண்டரடியாரெல்லாரையும் சார்ந்ததாகும் என்பதை, ஆச்சாரியாரின் திருவண்ணாமலைச் சொற்பொழிவு இனி வலியுறுத்தி நிற்பதாகட்டும்!

ஆச்சாரியாரின் இந்தக்கூற்றுக்களையெல்லாம் நாம் நம்புகிறோமா என்று கேட்பர். நாம் நம்பவில்லை! நிச்சயமாக நம்பவில்லை! அவர் கூற்றுக்களை நம்பும் பக்த கோடிகளுக்கே, மீண்டும் காணிக்கைகளாகத்தரத்தான் விரும்புகிறோம்!

ஆச்சாரியார் மேலும் பேசும்போது, "அன்பின்மூலம் அவர்களுடைய (சுயமரியாதைக்காரர்களுடைய) நம்பிக்கையின்மையைப் போக்கிவிடலாம்" என்றும் அறிவுறுத்தியுள்ளார். சுயமரியாதைக்காரர்கள் மூடக்கொள்கைகளின் மீது குருட்டு நம்பிக்கை கொள்வதில்லை. மூடக்கொள்கைகளிடத்து நம்பிக்கை யற்றவர்களாக இருக்கிறார்கள்; அதுகுறித்துநம்பிக்கையின்மை அவர்களிடத்துக் குடிகொண்டிருக்கிறது. புராணமரியாதைக்காரர்களாகிய வைதீகர்கள் குருட்டுத்தனமாக எதையும் நம்பிவிடவேண்டும் என்ற கட்டாயத்தால், மூடக்கொள்கைகள் அனைத்திடத்தும் நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மூடநம்பிக்கையாளர்களாக இருக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள், (மூட) நம்பிக்கையுள்ளவர்களோடு அன்போடு பழகி, அறிவுகொளுத்துவதன்காரணமாக, (மூட) நம்பிக்கையின்மையாளராக நாளடைவில் மாறிவிடுகிறார்கள் வைதீகர்கள். இந்தப்போக்கை ஆச்சாரியார் கவனிக்கிறார்! எனவேதான் வைதிகர்களைப் பார்த்து, சுயமரியாதைக்காரர்களோடு அவர்கள் பழக முற்பட்டால், அன்பின்மூலம் (மூட) நம்பிக்கையையூட்டி வைதிகத்தைக் காப்பாற்றிக் கொள்ளமுடியுமென்று கருதுகிறார்போலும் ஆச்சாரியார்! சுயமரியாதையும்—வைதீகமும் அன்பின்காரணமாக ஒன்றையொன்று அணுகநேர்ந்தால், (மூட) நம்பிக்கையின்மைதான் ஏற்படும் என்பதை, ஆச்சாரியார் இப்பொழுது உணர மறுத்தாலும், வருங்காலம் அவருக்குப்பாடங்கற்பிக்கத் தவறாது. ஆகவேதான் வைதீகர்கள், சுயமரியாதைக்காரர்களோடு அன்பின் மூலம் அணுக முற்படுவார்களேயானால், அது வரவேற்கத் தக்கதென்று சொல்லி மகிழ்கிறோம்; அக்கருத்தை வைதீகர்களுக்குக் கொடுக்கும் ஆச்சாரியாரைப் பாராட்டுகிறோம்!

ஆச்சாரியார் தொடர்ந்து பேசும்போது குறிப்பிடுகிறார், "அவர்களிடம் (சுயமரியாதைக்காரர்களிடம்) இப்பொழுதிருக்கும் மனக்கசப்பும் துவேஷமும் மறைந்துவிடும்" என்று. உண்மைதான். சுயமரியாதைக்காரர்கள், ஆண்டவன் பெயராலும், மதத்தின் பேராலும் மக்களின் அறிவும், ஆற்றலும், நேரமும், நினைப்பும், உழைப்பும், பொருளும் பாழ்படுவதைக் கண்டு மனக் கசப்புக் கொண்டுள்ளார்கள். இத்தகுப் பாழ்படும் செயல்களுக்கு வைதீகர்கள் உடந்தையாக இருப்பது கண்டு மனம் வெதும்புகிறார்கள். வைதீகர்கள் உள்ளபடியே சுயமரியாதைக்காரர்களோடு அன்பாகப் பழக முற்படுவார்களேயானால், அந்த வைதீகர்கள் திருந்தி நல்லறிவு பெற வழியேற்படும்; அப்பொழுது பாழ்படுத்தும் செயல் எதுவும் நிகழ இடமேற்படாது. அறிவு—ஆற்றல்—நேரம்—நினைப்பு — உழைப்பு — பொருள் ஆகிய இவை பாழ்படும் நிலை மறைந்தால், சுயமரியாதைக்காரர்களின் மனக் கசப்பும் தானே மறைந்துவிடும் என்பது உறுதி.

சுயமரியாதைக்காரர்கள் பொறாமை—வஞ்சம்—சூழ்ச்சி—சூது—வாது—கொடுமை—கொலை ஆகியவற்றை என்றும் துவேஷிக்கும் பண்புடையவர்கள். இவைகளெல்லாம் பெரும்பாலும் வைதீகக் கருத்துக்களின் பெயராலேயே நடைபெறுகின்றன. வைதீகர்கள் சுயமரியாதைக்காரர்களோடு அன்பின் மூலம் கூடும்போது, மூடத்தனம் நிரம்பி வைதீகக் கருத்துக்கள் அவர்களை விட்டு அகல வழி ஏற்படுகிறது. கொடுமைகள் பின் மறைந்துவிடும். கொடிய நிகழ்ச்சிகள் மறைந்துவிடுமானால், அவற்றின்மீது சுயமரியாதைக்காரர்கள் கொண்டிருக்கும் துவேஷமும் மறைந்துவிடும். எனவேதான், சுயமரியாதைக்காரர்களிடத்துக் காணப்படும் மனக் கசப்பும், துவேஷமும் மறைய வேண்டுமானால், வைதீகக் கோமான்கள் சுயமரியாதைக்காரர்களோடு அன்பின் அடிப்படையில் பழகவேண்டும் என்கிறோம். இதுபற்றி ஆச்சாரியார் கூறியுள்ள கருத்தையும் வரவேற்கிறோம்!

'கடவுள்' என்ற சொல்லின்மீது கட்டப்பட்டிருக்கும் மண் கோட்டையைச் சரியாமல் காப்பாற்றவும் ஆச்சாரியார், திருவண்ணாமலையில் பாடுபட்டுள்ளார். "பிரமாண்டமான ஆலமரம் ஒரு சிறியவிதையிலிருந்து உண்டாகிறது. நாம் இதைப் பார்க்க முடிகிறதினால் நம்புகிறோம். ஆனால் ஒருவர் இதைப் பார்க்காவிட்டாலும் கூட, இந்த உண்மையான விஷயத்தைச் சந்தேகிக்க முடியாது. ஆன... யால் பிரபஞ்சம் முழுவதையும் சிருஷ்டி செய்துள்ள சக்தியையும் நாம் சந்தேகிக்க முடியாது." இந்த வாதத்தைக் காட்டி கடவுட் கொள்கையை நிலை நாட்டப் பார்க்கிறார் ஆச்சாரியார்.

(14-ம் பக்கம் பார்க்க)

# ★ நான் கண்ட அழகர்சாமி ★

தொடர்ச்சி—6

எஸ். வி. லிங்கம்

ஜஸ்டிஸ் கட்சியின் முதல் கூட்டுறவு பெரியார் இராமசாமிக்குக் கிடைத்ததும், ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் 'திராவிடன்' பத்திரிகையைப் பெரியார் மேற்பார்வையில் நடத்தும்படி விடவேண்டுமென்று, ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் பன்னீர்செல்வம் அவர்களே காரணமாக இருந்தார். பன்னீர்செல்வத்திடம், ஒரு தமிழ்த் தினசரி செல்வாக்குள்ளதாக இருக்க வேண்டுமென்று, அடிக்கடி வற்புறுத்தி வந்தவர் அழகர்சாமியேயாகும். 'திராவிடன்' ஆபீஸ் பொறுப்பை மிகக் கஷ்டத்துடன் ஏற்றுக்கொண்டு, ஈரோட்டிலுள்ள குடியரசு ஆபீஸையும் மாற்றிக்கொண்டு, சென்னைக்குக் கொண்டுவந்து, இரண்டு பத்திரிகைகளின் பொறுப்பையும் பெரியாரே ஏற்று நடத்திவந்தார். தமிழ் மக்களிடம் தப்புப் பிரசாரம் செய்யப்பட்டு வந்த 'திராவிடன்' பத்திரிகை மீதிருந்த கெட்டபெயரை மாற்றி, தமிழ் மக்களிடையே செல்வாக்குடன் 'திராவிடன்' உலாவும்படி செய்தார். பெரியாரின் உழைப்பு 'திராவிடன்' வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. நெல்லூர் ஜஸ்டிஸ் மாநாட்டுக்குப் பின்னர், 'திராவிடன்' கூட்டுறவைப் பெரியார் விட்டுவிட எண்ணினார். இதற்குக் காரணம், அப்போதிருந்த கட்சித்தலைவர்களில் பலர், மிக மோசமான நிலைமையில் இருந்ததேயாகும். இப்படியிருக்கும்போது, ஆபீஸ் வரவுசெலவு நிர்வாகம் முழுவதும், பெரியாரால் நியமிக்கப்பட்ட சென்னை ஜஸ்டிஸ் கட்சி நண்பர்களிடமிருந்தது! இவர்களைப்பற்றிப் பெரியாருக்கு நல்ல எண்ணமுண்டு. ஆனால், இவர்களெல்லாரும் சுயநலக்காரர்களென்பது அழகர்சாமியின் எண்ணம். என்று இருந்தாலும், இவர்கள் ஒரு நாள், பெரியாருக்குத் தீங்கையே செய்வார்கள் என்பது அழகர்சாமியினுடையவும், அவர்தம் அக்காலத் தோழர்ளுடையவும் முடிவாகும். இந்த சமயத்தில் ஒரு வேடிக்கை நடந்தது.

அதாவது, ஒரு ஆள் 'திராவிடன்' ஆபீசிலுள்ள முக்கியமான கணக்குப் புத்தகங்களை யெல்லாம் யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டு போய், நண்பர் கண்ணப்பருக்கு வேண்டிய ஒருவருடைய வீட்டில் ஒளித்துவைத்துவிட்டார். பெரியாரோ ஈரோட்டுக்கு ஆபீசை மாற்றிக்கொண்டார். இந்த நிலையில், குமாரசாமிநாயுடு அண்டு சன்ஸ கம்பெனியார், பெரியார் தங்களுக்கு பதினெண்ணாயிரம் ரூபாய் தரவேண்டுமென்று வழக்குத் தொடுத்தார்கள். அந்த சமயத்தில், ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி, பெரியார் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திற்குச் சென்றுவிட்டார். தோழர்கள் அழகர்சாமி, குருசாமி, நடராசன், காளியப்பன் முதலான நண்பர்கள், நமது கட்சி வக்கீலைக் கண்டு, பெரியார்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கைப்பற்றி விசாரித்தார்கள். வழக்கு விவரங்களைக் கேட்ட வக்கீல், "திராவிடன்" பத்திரிகையின் வரவு செலவை, நாம் நடத்திவந்திருக்கிறோம். நடத்திய காலத்திலிருந்த நமது கணக்குப் புத்தகங்கள், இப்போது நமக்கு வேண்டும். கணக்குப் புத்தகங்களோ இல்லை என்கிறீர்கள். இல்லையென்பதோடு, அக்கணக்குப் புத்தங்களெல்லாம், எதிரிகளிடம் இருக்கிறதென்றும் சொல்லுகிறீர்கள். இந்த நிலையில், "நான் என்ன செய்வது" என்று வருத்தப்பட்டார். அழகர்சாமி வக்கீலை நோக்கி, "ஐயா, அந்தப் புத்தகங்கள் எதிரிகளிடமிருப்பதென்னவோ உண்மை. ஆனால், அவை நம்மிடம் இருந்தால் நாம் இந்த வழக்கில் வெற்றி பெற்றுவிட முடியுமா?" என்று கேட்டார். வக்கீல் மகிழ்ச்சியோடு "முடியும்" என்றார். இரண்டு நாட்களுக்குள், பெரியாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரின் வீட்டிலிருந்தே, பட்டப்பகலிலேயே அந்தக் கணக்குப் புத்தகங்கள் திருட்டுப் போய்விட்டன. அழகர்சாமி கொடுத்த தைரியத்தின்பேரில்தான் நான் அப்புத்தகங்களைத் 'திருடினேன்.' பிறகு அப்புத்தகங்களை வக்கீலிடம் கொடுத்தோம். வக்கீல் அவற்றை மகிழ்ச்சியோடு பெற்று, அவற்றில் தனக்கு வேண்டிய முக்கியமான குறிப்புகளை எடுத்துக்கொண்டு, "இவற்றைப் பத்திரமாக வையுங்கள்" என்று எங்களிடம் கொடுத்தார். அன்று, சென்னையில் எங்களுக்குள்ள பெரிய இடத்து ஆதரவு எப்படியிருந்ததென்றால், அந்தக்கணக்குப் புத்தகங்களை நம்பிக்கையாக வைத்திருப்பதற்கு இடமில்லாமலிருந்தது. சிறது நாட்கள் V. P. மணியர் வீட்டிலும், பின்னர் குருசாமி வீட்டிலும் அவற்றை வைத்திருந்தோம்.

தனது தலைவர் இல்லாத காலத்தில், அவரைப் பாதிக்கக்கூடிய வழக்கில், தலைவரின் இலாபத்திற்காக—அதாவது கட்சியின் இலாபத்திற்காக, தனது தோழர்களிடம் 'திருடவும்' அழகர்சாமி பின்வாங்கவில்லை. பின்னர், வழக்கு நீண்ட நாட்களாக ஒத்திவைக்கப்பட்டு வந்தது. கடைசியாகப் பெரியார் ஊர் திரும்பிய பின்பு, வழக்கு விசாரிக்கப்பட்டது. பெரியார் பதினெண்ணாயிரம் ருபாய் கொடுக்க வேண்டுமென்று, குமாரசாமிநாயுடு அண்டு சன்ஸ் கம்பெனி

யாரால் தொடரப்பட்ட அந்த வழக்கை, ஜஸ்டிஸ் ஸ்டோன் என்பவர் தள்ளிவிட்டார்.

* * *

பெரியார் ஐரோப்பா சென்றிருந்த காலத்தில், ஜஸ்டிஸ் கட்சி ஆபீஸ் அலுவல்கள், தோழர் கண்ணப்பர் மேற்பார்வையில் நடந்து வந்தன. பின்னர், கண்ணப்பர் விலகியதால், குமாரசாமிநாயுடுவே 'திராவிடன்' பத்திரிகையை நடத்திவந்தார். அதன் நிர்வாக ஆசிரியராக காலஞ்சென்ற வக்கீல் ஆறுமுகம் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். அவரேதான் பெரியார்மீது தொடரப்பட்டிருந்த வழக்குக்கும் வக்கீலாக நியமிக்கப்பட்டிருந்தார். வழக்கு நடந்துகொண்டிருந்தது. பெரியார் சார்பில் வழக்கு சம்பந்தமான அலுவல்களைக் கவனிப்பதற்காக, அழகர்சாமி, நடராசன் முதலானோர் சென்னைக்கு வருவார்கள். அவர்கள் தங்குமிடம் எது தெரியுமா? வக்கீல், ஆறுமுகம் அவர்களின் தலைமையிலுள்ள அதே 'திராவிடன்' ஆபீஸ்தான்!

தொண்டர்களுக்கும் தலைவருக்குமுள்ள பொறுப்பு எவ்வளவு, எப்படிப்பட்டது என்பது வக்கீல் ஆறுமுகத்திற்குத் தெரியாது. ஒவ்வொரு சமயம், ஆறுமுகம் அழகர்சாமியை நோக்கி, "உங்கள் நாய்க்கர் நாயுடு பணத்தையே ஏப்பம் விட்டுவிட்டாரே; பாபம் நீங்கள் நம்முடைய ஜில்லா (தஞ்சை) ஆட்கள் வழக்கு நடக்கும்போதெல்லாம் சென்னைக்கு வருகிறீர்களே! இரயிலுக்குச் செலவாகும் பணத்தையாவது நாயக்கர் உங்களுக்குக் கொடுப்பார் என்று எண்ணுகிறீர்களா?" என்று கேட்பார். உடனே அழகர்சாமி, "ஓய் ஆறுமுகம், இதெல்லாம் உனக்கு எதற்காக? நாய்க்கர் நாயுடுவுக்குப் பணம் கொடுக்காமல் ஏமாற்றுவதும், அல்லது நீங்கள் பொய் வழக்குத் தொடுத்திருப்பதும் கோர்ட்டில் தெரிந்துவிடப் போகிறது. ஆனால் உங்கள் நாயுடுவுக்கு இந்தப் பணமெல்லாம் ஏது? ஜஸ்டிஸ்கட்சி அதிகாரத்திலிருப்பதால் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் பாடப் புத்தகங்களை ஏற்படுத்தி, அவற்றை விற்று, இலட்ச இலட்சமாக சம்பாதித்த பணந்தானய்யா இது! இதைப்பற்றி உனக்கும் எனக்கும் என்ன கவலை?" என்று கேட்பார். இவ்விதமாக, எதிரியையும் கூட்டாளியாக்கித், தான்சரியென்று நினைத்ததைச் சாதித்துக் கொள்ளும் திறன் அழகர்சாமிக்கு உண்டு.

வழக்கு நடந்துகொண்டிருந்தபோது, "குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் கம்பெனியார், நான் ரூபாய் பதினெண்ணாயிரம்கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்களே, நான் "திராவிடன்" பத்திரிகைக்குப் பேப்பர் (நியூஸ் பிரிண்ட்) வாங்கியதாகச் சொல்கிறார்களே, இதற்கு அவர்களுடைய கணக்குப் புத்தகத்தில் என்பேரில் பற்று எழுதப்பட்டிருக்கிறதா? கம்பெனிக்கும் எனக்கும் "குடியரசு" சம்பந்தமாகப்பற்றுவரவு உண்டு. இதில் நான் கொடுக்கவேண்டியதாகப்பாக்கிகூட இருக்கக்கூடும். அதைக்கேட்காமல்; திடீரென்று பதினெண்ணாயிரம் கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது. நான் இது சம்பந்தமாக இவர்களுக்கு ஆர்டர் செய்ததுண்டா? இரசீதாவது இருக்கிறதா?" என்று வழக்குமன்றத்தில் பெரியார் அவர்கள் கேட்டார்.

'குடியரசு' பத்திரிகை சம்பந்தமாகக்கம்பெனிக் கணக்குப்புத்தகத்தில் பற்று வரவு இருக்கிறது. ஆனால் "திராவிடன்" சம்பந்தமாக ஒரு பேரேடோ, கணக்குப் புத்தகத்தில் ஒரு வரியோ, எழுத்தோ இல்லை. எனவேதான், வழக்கைநீதிபதிதள்ளிவிட்டார். வழக்கில் வக்கீல் ஆறுமுகத்தின் வாதம் தோற்றுவிடவே, நாயுடு கம்பெனியாரால் ஆறுமுகம் விலக்கப்பட்டு, 'திராவிடன்' ஆபிஸ் பொறுப்பு T. V. சுப்பிரமணியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. "திராவிடன்" ஆபீஸ் முதலாளிகள் மாறி மாறி வந்தார்களே தவிர, 'திராவிடன்' சாவிமட்டும் எப்போதும் அழகர்சாமி இடமே இருக்கும்.

தனது தலைவரிடமிருந்து கைமாறிப்போன ஆபிசை, மீண்டும்தலைவரிடமே கொண்டுவரவேண்டுமென்பதுதான் அழகர்சாமியின்விருப்பம்

* * *

ஒருசமயம் சங்கராச்சாரியார் சென்னைக்குவந்திருந்தார். சிலநாட்களாக அவருக்குச் சூணாம்பேட்டை ஜமீன்தார் பிச்சையிட்டார். ஒவ்வொருநாளும் மூவாயிரம் பேர்களுக்குமேல் சாப்பிடுவார்கள். அந்த சமயத்தில் சுயமரியாதைக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அதில்அழகர்சாமி, பொன்னம்பலம், குருசாமி, ஆகியோர் பேசினார்கள். குருசாமி சூணாம்பேட்டையாரைக் கண்டித்தார். "நம்முடைய பணம் அய்யருக்கு ஏன்போகவேண்டும்" என்று கேட்டார். அக்காலத்தில் சென்னையில் ஓர் தினசரிப்பத்திரிகை நடந்து வந்தது. நம்மிடமிருந்துபோன ஒரு நண்பர்தான் அதை நடத்தினார். அதில் குருசாமியைக் காரசாரமாகத் திட்டியிருந்தது. குருசாமியின் மாமனார் சுப்பிரமணியம் அந்தப் பத்திரிகையை என்னிடம் காட்டினார். அதை எடுத்துக்கொண்டு தங்கசாலையிலிருந்த பண்டிட் S. S. ஆனந்தம் மருத்துவ விடுதியில், சிகிச்சைக்காகத்தங்கியிருந்த அழகர்சாமியிடம் கொண்டுபோய்க் காட்டினேன். உடனே, அந்தப் பத்திரிகாசிரியர் அழகர்சாமி இருக்குமிடத்திற்கு அழைக்கப்பட்டார். பொன்னம்பலமும் வந்திருந்தார். ஆசிரியரை அழகர்சாமி நோக்கி, "நீ எங்களை இன்னும்கேவலமாகத்திட்டு, கவலைஇல்லை. ஆனால், பத்திரிகைகளில் விஷமத்தனமாகவும், கேவலமாகவும் எழுதுவதால் பாதிக்கக்கூடிய நிலைமையில் எங்கள் சுயமரியாதைக் கட்சியோ, நாங்களோ இல்லை. ஆனால்,குருசாமியைப்பற்றி நன்கு தெரிந்த நீ அவரைத்திட்டி எழுதலாமா" என்று கேட்டார். இதன்பயனாகக்கைகலப்பு ஏற்பட்டது. ஆசிரியர் உடனே போலீஸ் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். நான்தான் முதல் எதிரி. அழகர்சாமியும் பொன்னம்பலமும் அடுத்த எதிரிகள். வழக்கு பலநாட்கள் நடந்தது. ஆற்காட்டு இராமசாமி அவர்களின் தமயனார் துரைசாமி அவர்கள்தான் இந்த வழக்கைவிசாரித்தார். பணவிஷயத்தில் மிகக்கருமிகளான தலைவர்கள் மூன்று நான்கு பேர்களில் ஒருவரான சிங்காரவேலு, அழகர்சாமியைக்கூப்பிட்டு தைரியம் சொல்வார். பின்னர், எங்கள் நிலையைக் கண்டு அனுதாபப்பட்டு, "வக்கீல் வைத்து வழக்கை நடத்துங்கள்" என்று சொன்னார். அழகர்சாமி, "சரிதான் வழக்குக்கு வருவதற்கே இரயில் செலவுக்குப் பணம் ஏது" என்று

(9-ம் பக்கம் பார்க்க)

# ★ குறி பார்த்தல் ★

உலகில் இருந்து வரும் மூட நம்பிக்கைகளில் சிலவற்றை, மெஞ்ஞான முறைப்படி ஆராய்ந்து பார்த்தால், அவை இரண்டு காரணங்களால் உண்டாகியிருக்க வேண்டுமென அறியப்படும். வெறும் பழக்கச் சொற்களைக் கொண்டே பல மூட நம்பிக்கைகள் நிலைத்து வருகின்றன என்பது ஒன்று. இரண்டாவது ஏக தேச சந்தர்ப்பங்களிலிருந்து மூட நம்பிக்கை பிறந்திருக்க வேண்டும் என்பதாகும்.

சில மூட நம்பிக்கைகளுக்கு நமது ஆசையே (Our Wish) காரணமாக இருக்கலாம் எனத் தெரிகிறது. இந்தக் காரணம் ஒன்றே, பல பொய் நம்பிக்கைகளின் மேல் வைத்துள்ள அன்பிற்கு ஆதாரமென அறிதல் வேண்டும். நமது ஆசையின்படியே நிகழ்ச்சிகள் நமக்குச் சாதகமாகவே அமையவேண்டும் என்ற மனப்பான்மை பெரும்பாலோர்க்கு உண்டு. இந்த மனப்பான்மையாலேயே சோதிடத்தின் மேலும், ஜாதகத்திலும், குறிபார்த்தலிலும், கைரேகை பார்த்தலிலேயும், மை போட்டுப் பார்ப்பதிலேயும் பலருக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. துன்பப்படாமலே நமக்குச் செல்வங் கிட்டாதா? நாம் முயற்சி செய்யாமலேயே நம்மை விட்டுப்பிரிந்தவர்கள் திரும்பி வரமாட்டார்களா? உழைப்பின்றிச் சொத்தும், செல்வமும், புகழும் வாராதா? என்ற நோக்கங்கள் மக்கள் மனதில் அடுத்தடுத்து எழுவதால், ஆரூடம் என்ன சொல்லுகின்றது? குறி சொல்லுபவன் என்ன ஆதாரமளிக்கிறான்? கைரேகை என்ன குறிக்கின்றது? என்று அறிய அவாக்கொண்டு இந்த வஞ்சச் சொற்களின் மேல் நம்பிக்கை வைக்கிறார்கள்.

குறி பார்ப்பதில் பாமர மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்து வருகிறது. அன்றாட வாழ்க்கையில் மக்களுக்குப் பல குறைபாடுகள் நேரிடுகின்றன. இந்தக் குறைபாடுகளை எவ்வகையிலேனும் நீக்கிக் கொள்ளவேண்டும் என்ற அவா மேன்மேலும் உண்டாவது இயற்கை தானே. இந்த அவாவால் குறி பார்ப்பது மெய்யோ பொய்யோ, மக்கள் எதிர்பார்க்கும் விருப்பப்படி நிறைவேறும் என்று குறி சொல்லுபவன் சொல்லுகிறபடியால், அவன் செயலின் மேல் நம்பிக்கை ஏற்படுகிறது. அப்படிக் குறி சொல்லுவார் யார் என்று பார்ப்போம்.

குறிமேடையில் குறி சொல்லுகிறவர்களில் பலர் நரம்பு நோயால் (Nervous Disorder) பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எளிதில் சினம்—மகிழ்ச்சி அடைவார்கள் (Easily Excited). இவர்களுடைய ஆடம்பரங்கள் பாமர மக்களின் மனதை உருகச் செய்துவிடுகின்றன. உடுக்கை, சிலம்பு முதலிய வாத்தியங்கள் குறிகேட்க வந்திருப்போரை ஒருவித மயக்கத்திற்குள்ளாக்கக்கூடியனவாக இருக்கின்றன. குறிசொல்லும் இடங்களில், மதுரைவீரன்படம், நாய்கள்பின்தொடரக்குதிரைசவாரிசெய்வதாகவரையப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருக்கும். குறி சொல்பவனும் பகல்வேடத்திற்குரியதிருநீறு, குங்குமம் முதலியவற்றை உடல் முழுதும் பூசிக்கொண்டு, கழுத்தில் பொன் உருத்திராக்கம், கைகளில் பொன் தோடா, இடுப்பில் பட்டாடை முதலியவற்றை அணிந்துகொண்டு, உடுக்கை சிலம்புடன், தன் 'இஷ்ட தேவதை'யைத் தன் வயப்படுத்த முயலுவான். இந்த வேடங்களைக் கண்டோர் மயங்கி விடுகின்றார்கள். இவர்கள் மயக்கத்தை அதிகரிக்க, உடுக்கையையும் சிலம்பையும் உரத்துத் தட்ட ஆரம்பிப்பான். அவனுக்கு ஆவேசம் வருவதாக நடிப்பான். இந்த ஆவேசத்திற்கு வேண்டிய குடிவகையை அருந்துவதோடு, புட்டியிலும் சாராயம் மதுரைவீரனுக்காகப் படையல் போட்டிருக்கும் (இப்பொழுது வெளிப்படையாக மதுவருந்த முடியாததால் ஆவேசத்தை வரவழைக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது) வேலை ஒன்றுமில்லாதவினர்கள் அந்தக் குறிமேடைகளில் சென்று பக்திமான்களைப் போல் நடிப்பார்கள். இந்தச் சூதை அறியாத பெண்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பார்கள். இவைகளை, ஏதோ அலட்சியமாகக் கேட்டு, அதற்கு ஏதோ ஓர் பரிகாரத்தைத் தெரிவிப்பான். இந்தப் பித்தலாட்டங்களுக்கு ஏமாந்து, கையிலிருக்கும் பணத்தையோ, நகையையோ காணிக்கையாகக் கொடுப்பார்கள். இந்த விதமாகப் பெண்கள் மதிமோசம் போவார்கள்.

முக்கியமாகப் பெண்கள், பிள்ளைவரம் பெற, குறிமேடைகளுக்குப் போவதைப் பார்க்கலாம், அல்லது தனக்கும் தன் கணவனுக்கும் உள்ளமனமாறுபாடுகளைக்குறித்துக் குறி கேட்கப் போவதுமுண்டு. இந்த இரண்டையும் குறி சொல்லுபவன் எப்படித் தீர்ப்பானோ என்று ஆராய்ந்தறிவதே கிடையாது. இதைப் போன்ற மூட நம்பிக்கையைக் காண்பதரிது!

பிள்ளை பிறப்பதற்கு ஆண், பெண் இருவர் உடல் நிலை ஏற்ற பருவத்தில் இருத்தல் வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்—பெண்களுடைய உடல் பக்குவப்பட்டிருப்பதால், பிள்ளைகளைப் பெற்றெடுக்க அவர்களுக்குத் தடையொன்றும் இருப்பதில்லை. ஆனால், ஒரோர் வழி ஏதோ ஒருவர், இருவர்க்கு உடல் ஏற்ற பக்குவம் பெறாமலிருக்கும், அதனால் கருத் தரிக்க முடியாமற் போகும். இதனையும் தீர்த்துக்கொள்ள மருந்துகளும், சிகிச்சைகளும் இருக்கின்றன. மலட்டு ஆண்-பெண் சிற்சில சிகிச்சையால் கரு உருவாக்கும் தன்மையைப் பெறுகிறார்கள். அப்படியும் சிலருக்குப் பண்படுவதில்லை. மலட்டு ஆண் – பெண்களைப் போல (Sterile man and woman), மலட்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 29—5—49 [காஞ்சி

## செங்கொடி நிழலிலே சீனு

பழம் பெருமை வாய்ந்தது—ஆசியாவிலே பெரியது—அகில உலகிலே நான்காவது என்று பெயர் பெறுவது—வாணிக வளத்தைக் கொழிப்பது—பல பண்டம் பகர்ந்து வீசுவது—அறுபது இலட்சம் மக்களைத் தன்னகத்தே கொண்டது—உற்பத்தித் தொழில்களைப் பெருக்குவது—தொழில் புரியும் மக்களை 345 சதுர மைல் அளவிற்குப் பரப்பிக்கொண்டிருப்பது—கீழை நாடுகளின் நடுநாயகத் துறைமுகமாக விளங்குவது, என்றெல்லாம் போற்றப்பட்டுப் புகழ் மணங்களை அள்ளி வீசிவரும் ஷாங்கை நகர், செங்கொடியேந்திய வீரர்களின் அணைப்பிலே சாய்ந்துவிட்டது!

சீனக் கம்யூனிஸ்டுகளின் கையிலே சீனுவின் தலைநகர் வீழ்ந்துவிட்டது!

ஷாங்கை நகரின் சுற்றுப்புறங்கள் பிணக்காடாகி, நகரை நோக்கிப் பிணவாடை வீசிக்கொண்டிருக்கும்போது, நகர், கம்யூனிஸ்டுகளின் கரங்களிலே தாவி ஏறிக்கொண்டுவிட்டது!

வெடிகுண்டுகள் வானைப் பிளக்க—வெற்றிச் சங்குகள் ஊத—வீரமுழக்கங்கள் கிளம்ப—மக்கட் கூட்டம் நெருங்கிப் பின் தொடர—பச்சை நிறந்தோய்ந்த காக்கியுடையணிந்த வீரர்கள், செங்கொடி ஏந்தி, ஷாங்கை நகருக்குள் நுழைந்தனர்! ஷாங்கையை இதுவரையில் கட்டியாண்ட அரசாங்க அதிகாரிகளனைவரும், இரவோடிரவாக, வெளியுலகம் ஏக எண்ணி, விமானம் ஏறி வானில் சிட்டெனப் பறந்தனர்!

அடிக்கு அடி போரிட்டு முன்னேறிச் சென்ற கம்யூனிஸ்டுகள், அமைதியாகவே ஷாங்கை நகரைக் கைப்பற்றியுள்ளனர். முற்றுகை தகர்த்தெறியப்பட்டு மாற்றான் படைகள் ஒரு நகருக்குள் நுழையும்போது, அந்நகர மக்கள் பொதுவாகப் பீதியுற்றுப் பெருங்கலக்கமடைவதுண்டு. ஆனால் ஷாங்கையைப் பொறுத்தவரையில், கைப்பற்றுதல் அமைதியான முறையிலும், ஒழுங்கான முறையிலும் கம்யூனிஸ்டுகளால் கடைப்பிடிக்கப்பட்டதால், மக்களிடையே பீதி ஏற்படுவதற்குப் பதிலாக மகிழ்ச்சிதான் தாண்டவமாடுகிறது.

ஷாங்கை நகரில் கம்யூனிஸ்டுப் படைகள் நுழையும்போது, இரண்டாண்டுகளுக்கு முன் கம்யூனிஸ்டுகளிடம் தூது சென்றுவந்த டாக்டர் வூ யென் என்ற அரசியல் அறிஞர், அறுபது இலட்சம் மக்களையும் அமைதியாக இருக்கும்படியும், வழக்கம் போல் தங்கள் அலுவல்களைக் கவனிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருப்பதோடு, தொழில் செய்வோர் யாதொரு அழிவு வேலையிலும் இறங்காதபடிக்கும், வேலைகளிலே கருத்தூன்றும்படிக்கும் வேண்டிக்கொண்டிருக்கிறார். அரசாங்கத்தின் மாடங்களும், கூடங்களும் வெண்கொடி காட்டி அமைதியை வரவேற்றிருக்கின்றன. மக்கள் வாயிலண்டைகளில் நின்று மாறுபாட்டை வரவேற்றிருக்கின்றனர். மாணவர்கள் ஊர்வலம் சென்று வெற்றிக் கீதம் பாடியுள்ளார்கள்.

தலைநகர் வீழ்ந்துவிட்டது! இனி வீழாமலிருக்கும் சீனுவின் தென் பகுதியும் விரைவில் வீழ்ந்துவிடும் என்பது உறுதியாகிவிட்டது! வடக்கே இருந்து படிந்துவரும் செந்நிறம் இனித் தெற்கேயும் பரவி, சீனு முழுவதும் சிவப்பேறி நிற்கும் என்பது உறுதி! அப்படிச் சிவப்பேறி நிற்கும் காட்சி, உலக வல்லரசுகளை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தும் என்பதோடு, 'டாலர் சங்கிலி'யையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

சீன அரசாங்கத் தலைவராக இருந்த—இப்பொழுது மறைமுகமாக இருக்கும் சியாங்கே ஷேக்கும், அவரது குயோமின்டாங்கும் மக்களை மதிக்கவில்லை; மறக்கத் தொடங்கினர். மதிக்காத தலைவரையும் கட்சியையும், மக்களும் மறக்கத் தொடங்கினார்கள். எனவேதான் அரசாங்கப் படைகள் கரைய ஆரம்பித்தன, அதே வேளையில் கம்யூனிஸ்டுப் படைகள் பெருகத் தொடங்கின. அரசாங்கத் துருப்புகளுக்கென அமெரிக்கா கொடுத்த ஆயுதங்களெல்லாம், எதிர்த்துவந்த கம்யூனிஸ்டுகளிடம் நாளடைவில் போய்ச் சேரும்படியான அதிசய நிகழ்ச்சி அங்கே நடைபெறலாயிற்று. மக்களை மதிக்கத் தவறினர்; மக்களோ மாற்றானிடம் போய்ச் சேர்ந்தனர்; ஆணவ ஆட்சி புரிந்தோர் இன்று மண்ணைக் கவ்வினர்!

சென்ற சில வாரங்களுக்கு முன், முற்றுகையைச் சமாளித்து நின்ற படைத்தலைவர் ஒருவர், ஷாங்கையை 'இரண்டாவது ஸ்டாலின் கிராட்'ஆக ஆக்கப் போகிறோம் என்று வீரமுழக்கமிட்டார். ஸ்டாலின் கிராடில், அன்று ஹிட்லரின் படைகளை எதிர்த்துத் தெருவுக்குத் தெரு, வீட்டிற்கு வீடு மக்கள் போரிட்டனர். அந்த ஸ்டாலின் கிராட் போராட்டம், உலகப் பெரும் போரின் திருப்பு மையமாக அமைந்தது. வீறுகொண்ட ரஷ்யர்கள் நாஜிகள்மேல் பாய்ந்து பெர்லின் வரையில் அவர்களைப் பின்னடையச் செய்து அங்கே முறியடித்தனர். அந்த நிலையா ஷாங்கை நகரிலும் நிலவிற்று? என்றால் இல்லை. அதற்கு மாறாக ஷாங்கையைப் பொறுத்த வரையில், உள்நாட்டுப் பாதுகாப்புப் படைவீரர்கள், வந்த கம்யூனிஸ்டுகளை வரவேற்றுள்ளனர். தெருக்களில் ஏற்படுத்தி வைத்திருந்த முட்டுக்கட்டைகளையெல்லாம் எடுத்துவிட்டனர்; சுவர்களில் கம்யூனிஸ்டுகளுக்கு மாறுபாடாக எழுதி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளையெல்லாம் அகற்றியிருக்கின்றனர். சீன அரசாங்கம் வெறும் வாய்ப்பசப்பு மூலம் வெற்றிபெற எண்ணியிருக்கிறதேயொழிய, எதிர்ப்புச் சக்தி கொண்டு நகரை மீட்கும் எண்ணம் அவர்களுக்குப் பல நாட்களுக்கு முன்பே அற்றுவிட்டதெனத் தெரியவருகிறது.

மோ சி—டாங் தலைமையின் கீழ் கம்யூனிஸ்டுகள் திரண்டு நிற்கின்றனர். மோ சி—டாங் இப்பொழுது வெற்றிக் களி கொண்டாடினாலும், அவருக்கு எதிர்நிற்கும் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. இதுவரையில் இருந்துவந்த ஆற்றலின்மையையும், ஊழல்களையும் போக்கடித்துத் திறமையுள்ள சமநெறி ஆட்சியை நிறுவவேண்டிய பெரும்

பொறுப்பு அவரைச் சார்ந்ததாயிருக்கிறது.

சீரண்டலற்ற நல்ல சுயஆட்சியை நிறுவி, சமூக — பொருளாதார— அரசியல் துறைகளில், சீனாவை உலக அரங்கில் உயர்ந்தவொரு நிலைக்குக் கொண்டுவர, வெற்றிகொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் பாடுபடுவர் என்று கருதுகிறோம்.

சீனா இனி மாஸ்கோவுக்கு அடிமையாகிவிடும் என்று சிலர் ஐயங் கொள்ளுகிறார்கள்.

சீனா மாஸ்கோவுக்கு அடிமையாகி விடுகிறதா, அல்லது அன்பனாக வாழ்கிறதா என்பது, மோ சி—டாங் நடத்திக்காட்டும் ஆட்சியின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. நாமும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

செங்கொடி நிழலிலே ஷாங்கை! சீனாவின் பரப்பிலே சிவப்பு! சிவப்பு ஏற ஏற மக்களின் உள்ளங்களிலே மகிழ்ச்சி மலரட்டும்!

> "சுதந்திரம் சமத்துவம் என்பனவற்றைப் பற்றிய பொய்யுரைகளை விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. அவைகள் உங்களிடத்திலில்லை."
>
> —பர்னட்ஷா.

## நான்கண்ட அழகர்சாமி

6-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டார். சிங்காரவேலர், "ஓர் நல்ல வக்கீலை வைத்து நடத்துங்கள்" என்று சொல்லி. ரூபாய் இருபத்தைந்துக்கு ஓர் செக் கொடுத்தார். அதோடு, பாரிஸ்டர் T. குழந்தை அவர்களுக்கு ஓர்சிபார்சுக்கடிதமும் கொடுத்து, எங்கள் வழக்கை நடத்தும்படி செய்தார். பாரிஸ்டர் குழந்தை அவர்கள் முதல் வாய்தாவுக்குக் கோர்ட்டுக்குவந்தார். அதற்குப் பின்னரும் நாலைந்து வாய்தாக்கள் நடந்தன. ஒவ்வொரு வாய்தாவின்போதும் சிங்காரவேலர் வீட்டுக்குப்போவோம். அவர் என்பெயருக்கு இருபத்தைந்து ரூபாய்க்குச் செக் கொடுப்பார். அதை மைலாப்பூர் பாங்கில் மாற்றுவோம். ஆனால், வழக்குக்காக வக்கீலைக் கூப்பிடுவதுமில்லை, பணம் கொடுப்பதுமில்லை, கடைசியாக, வல்லத்தரசு, T. M. பார்த்தசாரதி ஆகியவர்களின் தலையீட்டால், எங்கள் எதிரியும் நாங்களும் சமாதானம் ஆய்விட்டோம். இதற்காகப் பார்த்தசாரதி வீட்டில் ஓர் சிற்றுண்டி விருந்துகூடநடந்தது

இக்காலத்தில், அழகர்சாமியின் எண்ணம் எப்படியிருந்ததென்றால், இரண்டுமாதத்திற்கு ஒருமுறை சென்னைக்கு வழக்கு சம்பந்தமாக வருவதால், சென்னையில்சிலபொதுக் கூட்டங்கள் நடத்த முடிகிறது என்பதில் அவருக்கொருமகிழ்ச்சி. எந்தச் சந்தர்ப்பத்திலும், எவ்விதமான நெருக்கடி ஏற்பட்ட காலங்களிலும், அழகர்சாமி தனது கொள்கைக்காகப் பிரசாரம் செய்வதற்கு இடம் கிடைக்கிறதா என்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பார். தோழர் அழகர்சாமி அவர்களைப்பற்றித்தப்பான செய்திகள் பல ஈரோட்டுக்குப்போகும். ஆனால், நாளடைவில் அவையெல்லாம் சுயமரியாதை இயக்கத்துக்குச் சாதகமாகவே முடியும். கொள்கைப் பிரசாரம் ஒன்றையே குறிக்கோளாக அழகர்சாமிஎண்ணுவாரேயன்றி, தன்னைப்பற்றி யார் என்ன சொல்லுகிறார்கள், என்ற பயமோ கவலையோ கொண்டது கிடையாது. (தொடரும்)

## இங்கே!

திருமலை—திருப்பதி கோயில்களின் மத ஆலோசனைக் குழுவின் தலைவரான டி. கே. துரைசாமி (அய்யங்கார்) 'திருமேனி', திருமலை—திருப்பதி கோயில்களுக்குப் பக்தகோடிகள் காணிக்கையாகச் செலுத்தும் பொருளைப் பாழ்பட்ட மண்டபங்களையும், கோபுரங்களையும் புதுப்பிக்கச் செலவிட வேண்டுமேயொழிய, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் போன்ற நிலையங்களுக்குச் செலவிடக்கூடாது என்று, 'இந்து' இதழில் ஆசிரியருக்கு எழுதிய முடங்கலில் தீட்டியுள்ளார். திருமலைக் குன்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் விசயநகர மன்னர்களால் கட்டப்பட்ட கோபுரம் சில ஆண்டுகளுக்கு முன் கீழே வீழ்ந்துவிட்டதாம். அதனைப் புதுப்பிக்க வேண்டுமாம்! குரங்குகள் வாழ அல்லாமல் மக்கள் வாழவா பயன்படப் போகிறது? இல்லை! திருமலைக் குன்றின் உச்சியிலிருக்கும் போடிகோபுரம் பழுது செய்யப்படவேண்டியதோடு, அதுமொட்டையாக இருப்பதால் அதன்மேல் கோபுர வடிவில் கட்டிடம் எழுப்பப்படவேண்டுமாம்! அது அவசியமாம்! ஆனால் பள்ளிக்கூடத்திற்கு அந்தப் பொருளைச் செலவழிக்கக் கூடாதாம்! திருப்பதியின் பெரிய கோபுரம் அவசரமாகப் பழுது பார்க்கப்பட வேண்டுமாம்! கோவிந்தராச சாமியின் சிறிய கோபுரமும், திருமலை நம்பியின் கோயிலும் கூடச் சீர் செய்யப்பட வேண்டுமாம்! ஆனால் அதற்குச் செலவழிக்கும் பொருளைக் கல்லூரிக்குச் செலவழிக்கக் கூடாதாம்!

## அங்கே!

அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ நகரில், 440 மாடிகள் அமைந்த மாபெரும் மாளிகையைக் கட்டுவதற்கான திட்டம் ஒன்று, நகர அதிகாரிகளிடம் சிற்பி ஒருவரால் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். அந்தக் கட்டிடத்தில் 300 வீட்டுகளும், 20 மாதா கோயில்களும், 50 பொழுதுபோக்குக் கூடங்களும் 10 வைத்தியசாலைகளும், 1000 கடைகளும், 80000 கார்கள் நிறுத்தி வைக்கப்படுவதற்கான இடவசதிகளும் அமைக்கப்பட்டிருக்குமாம். மாளிகையைக் கட்டிமுடிக்க 175 கோடி பவுன் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மனிதன் இறந்து புதைகுழிக்கு எடுத்துச் செல்லப்படும்போதுதான் மாளிகையைவிட்டு வெளிவரவேண்டிய அவசியம் ஏற்படும் என்றும், மற்றவகையில் அது ஒரு பெரிய நகரமாகவேதான் காட்சியளிக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் பணத்தைப் பயன்படுத்தச் சிற்பிகள் இருக்கிறார்கள்; இங்கே பணத்தைப் பாழாக்கத் 'திருமேனிகள்' இருக்கிறார்கள்!

> "மனிதன் சுதந்தரத்தோடு பிறக்கிறான். ஆனால் அவன் எங்கும் அடிமைத்தளைகளில் பிணைப்புண்டு கிடக்கிறதைக் காண்கிறோம்"
>
> —ரூசோ.

## குறி பார்த்தல்

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆடும், மாடும் புழுப் பூச்சிகளும், செடிகளும், மரங்களும் உலகில் ஒரே வழி நின்று நிலவுகின்றன. விளையாத நிலங்களும் சில இருக்கின்றன. இவைகளை, அதாவது, செடி, கொடி, மரம், புழு, பூச்சி, ஆடு, மாடுகளை உற்பத்தி செய்ய (Remoduce) மதுரை வீரனால் முடியாதிருக்க, ஆடவர் பெண்டிரை மட்டும் கருக்கொள்ளச் செய்யமுடியும் என்றால், யார் நம்புவார்கள்? இதை முட்டாள்கள்தான் நம்பக்கூடும்! கருக்கொள்ளுவதற் கிருக்கும் தடையை நீக்க டாக்டர்களுக்குத் தெரியுமே யல்லாது மோசக்காரர்களாகிய (Mounte-banks and Charlatans) குறி சொல்லுகின்றவர்களுக்கு ஒன்றுந் தெரியாது. மதுரை வீரன் படத்தாலும், உடுக்கை சிலம்பத்தாலும், தீபத்தின் சுடர் அசைவாலும் மலட்டுத்தனம் நீங்குமாயின், எவ்வளவோ எளிதாகக் கோடானு கோடி சதுப்பு நிலங்களை விளை நிலமாக்கலாமே! பதர் நெற்களை கதிர்விடச் செய்யலாமே!

சில சமயங்களில் குறி கேட்கப் போனவர்களுடைய கோரிக்கைகளைக், குறி சொல்லுகிறவன், அவர்கள் அவனிடம்சொல்லாமலே அவன் தெரிந்துகொண்டவன்போல் தெரிவிக்கிறான். இதை மாயாவாதத்தில் (Sipritualisim) எண்ணத்தைத் தெரியப்படுத்தாமலே தெரிந்து சொல்லுவதென்று (Thouht Reeding) கூறுவர். இதனை மறைவான ஞானமெனவும் (Occultion) கூறுவர். இந்தத் தந்திரத்தைத்தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் (Evidence For the Super-natural) என்ற சிறு நூலை வாங்கிப் படிக்கலாம். இந்தக் குறி சொல்லுவதில் சில மோசங்கள் நடக்கின்றன. சில இடங்களில்,இரகசிய ஆட்களைக்கொண்டு விஷயத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டபிறகு குறி சொல்லுகிறார்கள். சாதாரணமாகக் குடுகுடுப்பைக்காரர்கள் இந்த மோசத்தைச் செய்கிறார்கள். மக்களில் சிலர் தங்களுடைய குறைகள் உதடு அசைவதாலும், கைவிரல்கள் ஆடுவதாலும், மெதுவாகத் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வதாலும், தங்கள் முகப் பார்வையாலும் தெரியும்படி செய்கின்றார்கள். கூர்மையான பார்வையுடையோனாகிய குறி சொல்லுவோன், இந்த அசைவுகளைக் கொண்டே அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்ளுகிறான். குறி சொல்லுகிறவன் கேட்கும் கேள்விகளுக்குக் கொடுக்கும் விடைகளாலேயும் தங்களுக்குத் தெரியாமலே தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டு விடுகின்றார்கள். இத்தகைய தந்திரங்களால் குறி சொல்லுகிறவன் தன்னைப் பிறர் நம்பும்படி செய்கின்றான். இந்தச் சூழ்ச்சிகளை அறியாத பாமர மக்கள் குறிக்காரன் சொல்லுவதெல்லாம், மதுரைவீரன் அருளாலென்றும், தெய்வீகத் தன்மையாலென்றும் மதிமயங்கி மூடநம்பிக்கையை வளர்த்து வருகின்றார்கள். இந்தக் குறி மேடைகளில் எத்தனையோ பேர் தங்கள் பொருளை இழந்தார்கள்! மதியை இழந்தார்கள்! மானத்தை இழந்தார்கள்! இவர்களுக்குக் கணக்கேயில்லை!

கை பார்த்துக் குறி சொல்லும் வித்தை (Palmistry) என்று ஒன்றுளது. கை ரேகைகளைப் பார்த்துக் குறவர்கள் (Nomads) சாதாரணமாகக் கிராமங்களில் குறி சொல்லுவதுண்டு. குடுகுடுப்பைக்காரனும் இவ்வித குறிகளைச் சொல்லுகிறான். பண்டாரவேடம் போட்டுக்கொண்டு, ஓலைச்சுவடி யொன்றைக் கையிலேந்தி, கையைப் பார்த்துக் குறி சொல்லும் வேடக்காரர்களை நகர்களிலும், நாட்டுப்புறங்களிலும் பார்க்கலாம். சென்னை மூர்மார்க்கட்டுக்கு அருகாமையில் பலர் ஆரூடம் அதாவது ஓர்விதக் குறி சொல்லிப் பிழைக்கிறார்கள். கையைப் பார்க்கிறான், ஓலைச் சுவடியையோ அல்லது காகிதச் சுவடியையோ திருப்புகிறான். உடனே உனது காரியம் கைகூடும் என்கிறான். உனது மகன் திரும்பி வருவான் என்கிறான். உனது கணவனுக்கு வேலை கிடைக்கும் என்கிறான். இவ்வாறு அந்த நிகழ்ச்சிகளைத், தான் தெரிந்து சொல்லுவதுபோல நடித்துப் பாமர மக்களிடம் பணம் பறிக்கிறான். இந்த ஏழை சொல்லும் குறிக்கும், 'இந்து' போன்ற செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தும் சோதிடருக்கும் ஒன்றும் வேறுபாடில்லை. ஒரே மாறுபாடு உண்டு. ஒருவன் காலணாவுக்குக் குறியோ, சோதிடமோ, ஆரூடமோ சொல்லுகின்றான். மற்றொருவன் ஒரு ரூபாய் முதல் 5, 10, 15 வரை பெறுகின்றான். இரண்டும் ஏமாற்றுத்தான்.

குறி பார்ப்பது என்பதெல்லாம் வெறும் மனமயக்கே. பொய்யை நம்புவதற்கு வெறும் நம்பிக்கைதான் (Simple Belief) வேண்டும். உலகில் கோடானுகோடி மக்கள் காலை முதல் இரவு வரை உழைத்துத் தங்கள் வாழ்க்கையை நடத்தி உயிர் பிழைத்து வருகிறார்கள். ஆனால் சிலர் வேலையொன்றும் செய்யாமல் சோம்பல் கொண்டு அறிவையும் வளரச் செய்யாமல், பகுத்தறிவையுங் கொன்று சிற்சில மோசச் சொற்களைக் கேட்டு ஓர்வித ஆறுதலை அடைகின்றார்கள் சோதிடம், ஆரூடம், குறி முதலிய வித்தைகள் சோம்பேறிகள் பிழைக்க ஏற்படுத்திக்கொண்ட சாதனங்களென அறிக. மெஞ்ஞான முறையால் இனி நடக்கும் நிகழ்ச்சிகளை அறிவதுபோல், இந்தக் குறிகளாலும், சோதிடத்தாலும், கைக்குறிகளாலும் ஒன்றும் தெரிந்துகொள்ள வகை இல்லை. சோம்பேறிகள் மனத்திருப்திக்காக (Mental Satisfaction) உண்டாக்கிக் கொண்ட வித்தைகளே யொழிய, பொதுமக்களின் பொது நன்மைக்கு ஏற்பட்ட வித்தைகள் அல்லவென அறிதல் வேண்டும்.

கையிலுள்ள கோடுகளைப்பார்த்துச் சோதிடம் சொல்லுவது உலகம் முழுமையும் பாவியுள்ள ஒரு வித்தையாகும். அது வெறும் பழக்கமே யல்லாது உண்மையல்ல. நமது கையிலுள்ள கோடுகளைப்போல், நமது ஆதிகாலத்துப் பங்காளிகளாகிய வாலில்லாக் குரங்குகளுக்கும் உண்டு. இன்னும் தூரபங்காளிகளாகிய வாலுடைய குரங்குகளுக்கும் கையில் கோடுகள் இருக்கின்றன. காட்டு மனிதக்குரங்குகளின் கையிலிருக்கும் கோடுகள், ஆதிகாலத்தில் நமது குரங்கு மூதாதைகள் மரத்தில் தாவிப்பிடித்துத் தாண்டுங்காலையிலுண்டான தோல்மடிப்புகள். அந்த இனத்திலிருந்து வந்தவர்களாகிய நமக்கும் அந்த மடிப்புகள் பரம்பரையாகத் தோன்றுகின்றன. நமது கைக்கோடுகள் காட்டுக் குரங்குகளின் இனப்பரம்பரையாக வந்தவை. பலகோடி ஆண்டுகளாக

நமது மூதாதைகள் மரங்களில் வாழ்ந்தகாலத்தில் தாவுவதற்குத் தங்கள் கைகளைப் பயன்படுத்தி வந்தனர். கைகள் மடியுண்ட இடங்களில் வரிவரியாகக் கோடுகள் உண்டாயின. அப்படி உண்டான கோடுகள்தான் வழிவழித் தலைமுறையாக நமக்கும் வந்திருக்கின்றன. இதுதான் நமது உள்ளங்கைகளில் உண்டாகியிருக்கும் கோடுகளுக்குக் காரணமாகும். மரத்தில் தாண்டியதால் மடிந்த இடங்களைக் கொண்டு நமது நடத்தைகளை எப்படி அறியக்கூடுமெனக் கேட்கின்றோம்? இரண்டுவரி ஐந்தாம் விரலுக்குக் கீழ் இருந்தால் அவனுக்கு இரண்டு மனைவிகளாம்! ஆனால் ஒரு வரியுடைய பலருக்குப் பல மனைவிமார்கள் இருப்பதைக் காணலாம்!! ஆதலின் இந்தவரிகளைக் கொண்டு நமது நடவடிக்கைகளைக் குறிப்பது வெறும் உத்தேசமாகும். (Pure guess) இந்த வெறும் உத்தேசத்தை உண்மையென நினைத்துக்கொண்டு மோசம் போகின்றவர்கள் எத்துணையோ பேர். உள்ளங்கையில் மட்டுமல்லாமல், விரல்கள் மடியும் இடங்களிலும் கோடுகளைக் காணலாம். இந்தக் கோடுகள் விரல்கள் மடியுண்டபடியால், விரல்மடிப்புகளிலெல்லாம் தோன்றியுள்ளன. இதுபோலவேதான் மற்றக்கைவரிகளும் தோன்றியுள்ளன. ஆனால் விரல் மடிப்புகளைக்கொண்டு நமதுநடவடிக்கைகளைக் குறிக்கும் கைக்குறி சொல்வோர் இல்லை எனக் கூறலாம். அந்த விரல் மடிப்புகள் பயன்படவில்லை எனின் மற்றக் கைமடிப்புகள் மட்டும் பெருமைபெற்றது எவ்விதம்? எவனோ ஒருவன் ஒருகாலத்தில் கைக்கோடுகளைப் பார்த்துக் குறி சொல்லியிருப்பான். இதை உண்மையென நம்பி பழக்கமுறையால் கையைப்பார்த்துக் குறி சொல்லும் பழக்கம் வந்திருக்கவேண்டும். எந்த மூடனும் இந்தப் பழக்கத்தைக் கையாளலாம். ஆனால் இந்த மூடநம்பிக்கையில் பற்றுள்ளவர்களைப் பற்றித்தான் நாம் வருந்துகின்றோம்.

விளக்குவைத்துப் பார்த்தல் எனும் ஓர் மூடப்பழக்கம், பாமரமக்கள் வீடுகளில் வழங்கி வருகின்றது. ஒரு பூசாரி தன்முன் ஒருவிளக்கை ஏற்றி, அந்த எரியும்சுடரை அந்த அம்மன் இந்த அம்மன் என்று வர்ணித்து, இதைச்சொல்லம்மா, அதைச்சொல்லம்மாவென எரியும் சுடரோடு பேசுவதைப் போல் நடித்து, சுடர் அசையாமலிருந்தால் 'அம்மா உத்தரவு அளிக்கவில்லை' என்றும், அசைந்தால் 'அம்மா உத்தரவு கொடுத்தாள்' என்றும் பொருள் படுத்திக்கொண்டு மக்களை ஏமாற்றும் விதம் ஒன்றுண்டு. கிராமங்களில் ஏழைகள் நோய்ப்பட்டால் இம்மாதிரியான மூடப்பழக்கங்களைக்கொண்டுநிவர்த்திக்கப் பார்க்கின்றார்கள். இதனுடைய ஆபாசத்தைச் சற்று விளக்கிப் பார்க்கவேண்டும். கோடானுகோடி தீபங்களை நாம் காண்கிறோம். அசையாத தீபங்களையும் இன்றைக்காலத்தில் பார்க்கின்றோம். அதாவது மின்சாரவிளக்குகள். இந்தத் தீபச்சுடர்கள் காற்றிலும் அசைவதில்லை, சாதாரணவிளக்குகள் காற்றில்லாமல்போமாகில் அசைவற்று எரியும்; காற்று வீசியதும் சுடர்கள் அசைவதைப் பார்க்கலாம். இந்தச்சுடர்களெல்லாம் உயிரற்றவை; நமது சொல்லுக்கு அடங்காதவை; நமது சொல்லையும் கேட்கமுடியாதவை. நமது காலில் மிதிபடும் கல்லுக்கும் விளக்கில் எரியும் தீச்சுடருக்கும் மேற்கண்ட செய்திகளில் மாறுபாடு எதுவும் கிடையாது. அப்படியிருக்க, எவ்விதம் சுடர்களுடன் பேசக்கூடுமோ அது நமக்கு விளங்கவில்லை. பைத்தியம் பிடித்தவர்கள்தான் சுடருடனும், சுவருடனும், செடி, மரங்களுடனும் பேசுவார்கள். இதை ஆராயாமல் விளக்கு வைத்துப் பார்த்து அதனுடன்பேசுவதென்றால் என்ன மூடத்தனம் என்றுஎண்ணிப் பார்க்கவேண்டாமா? பூசாரிதான் அவன் வாழ்வுக்காக மோசம் செய்கிறான் என்றால், ஏழைமக்கள் அவன் பித்தலாட்டத்திற்குஏமாந்து,அவன் பிதற்றுவதைக்கேட்டு அவனை நம்புவதென்றால், என்ன மதிமோசம்!

தீச்சுடர்களைக் காற்றில்லாத அறைகளில் எரியவைத்து நமக்கு வேண்டியபடி தீபச்சுடரை அசைய வைக்கலாம். காற்றில்லாத கூடத்து அறையில் விளக்கை ஏற்றி அதன் அருகே உட்கார்ந்துகொண்டு காற்றை மெதுவாக வாயின்மூலமாக இழுத்தால் சுடர் அசைவற்று நிற்கும். அது நமது விருப்பப்படி அசையவேண்டுமானால், கையை ஆட்டினாலும், நமது உடலை ஆட்டினாலும் அல்லதுமெதுவாகஊதினாலும் தீபச்சுடர் அசையும். இவ்விதம் யாரும் செய்து காட்டலாம். இவ்விதமாக யாரும் செய்து காட்டும்போது எந்த அம்மனும், மாரியாத்தாளும்,மதுரைவீரனும் தீபச்சுடரில் புகுந்துகொண்டதாக எண்ணுவதில்லையே. ஆனால் பூசாரி அதேமாதிரி அசைய வைத்தால் அந்த அசைவு கடவுளால்உண்டானதாக எண்ணுவது பைத்தியக்காரத்தனமல்லாமல்வேறென்ன? காற்றில்லாமலிருந்தால் சுடர் அசைவற்று எரிகிறது, காற்றுப்பட்டால் அசைகிறது. ஆதலின் அசைவுக்கும், அசையாத்தன்மைக்கும் காற்றே காரணம். இதற்கு எந்த அம்மனுதவும் வேண்டுவதில்லையே! இந்தப் பித்தலாட்டங்களைச் செய்யும்பூசாரிகளையும், அவர்கள் சொல்வதைக் கேட்கும் பாமரமக்களையும் ஒன்று கேட்கின்றோம். அதாவது காற்றடிக்கும் அறைகளில் சாளரங்களுக்கு எதிரிலாகிலும், வாசல்களிலாகிலும், தெருக்களிலாகிலும், குத்துவிளக்கைஏற்றிவைத்துஅதன் சுடரை அசைவற்று நிற்கும்படிசெய்யுங்கள்பார்ப்போம். எவ்வளவு[illegible] உரத்து அம்மனை வர்ணித்தாலும் அந்த அம்மன் சுடரில் நுழையவே மாட்டாள்! இந்தத் தந்திரத்தை அறிந்த பூசாரி கூடத்து மூலையிலும் காற்றில்லா அறையிலுமே சுடரை எரியவைக்கப் பார்ப்பான். இதுதான் பூசாரி செய்துவரும் தந்திரம். எனவேதான் குறி பார்த்தல் என்பது எந்தப்பயனையும் அளிக்காத மூடநம்பிக்கைகொண்ட செயலாகும் என்று அறிவுறுத்துகிறோம். ✱

## பிரபஞ்சம் சிந்திய மை!

“இப் பிரபஞ்சமானது சிந்திய மை போல இருக்கிறதே யொழிய, ஒரு பேனாவால் எழுதப்பட்ட எழுத்துக்களைப் போலக் காணப்படவில்லை என்று விஞ்ஞானிகள் விதந்தோதுகின்றனர். அதாவது, பிரபஞ்சத்தை, ஒரு அறிவு கட்டுப்படுத்தி, முன்னெச்சரிக்கையாக நடத்திக்கொண்டு போவதாகத் தெரியவில்லை என்பதோடு, அணுக்களின் கூட்டுமுறையால், பெரும் பெரும் கோணங்கள் தோன்றி, யாதொரு கட்டுப்பாடுமின்றி, அநேக பெரும் கோள்கள் ஒன்றோடொன்றுமோதி அழிந்துவிடுவதும், தானாக அணுக்கள் ஒன்றுசேர்வதும் ஒரு கர்த்தா இல்லாததைக் காட்டுகின்றது!”

—பகுத்தறிவு

# சிந்திடும் கருத்துக்கள்

"சுதந்திரம் பெற்றபிறகு, காங்கிரஸ் ஊழியர்கள் அவர்களுக்குரிய சாதாரண கடமைகளைச் செய்வதிலிருந்து தவறினர். அதிகாரத்தில் பங்குபெறவேண்டுமென்ற பேராசை அவர்களுக்கு உண்டாகியுள்ளது. சுயநலத்திற்கும், பேராசைக்கும் இடங்கொடுத்து வளர்ப்பதன் மூலம் காங்கிரசை வலிவிழக்கச் செய்யக் கூடாது என்று நான் காங்கிரஸ் ஊழியர்களைக் கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ்காரர்களிடையில் ஒழுக்கம், கட்டுப்பாடு இல்லாமல் போய்விட்டது. புது அமைப்பு முறை அமுலுக்குக் கொண்டுவரும் போது இவ்வாறு ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ்காரர்கள் யோக்கியமாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்ளவேண்டும்."

—பட்டாபி சீத்தாராமையா
17—5—49.

* * *

"மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் மாகாண மந்திரிசபைகளும் தங்கள் கடமைகளைச் செய்வதில் தவறிவிட்டன. சில விஷயங்களில், தங்கள் அலுவல்களை மந்திரிகள் எப்படி நடத்திச் செல்லவேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனரோ, அம்மாதிரி தங்கள் கடமைகளை மந்திரிகள் நடத்திச் செல்லவில்லை. மற்றும் சில விஷயங்களில் சாதாரண காங்கிரஸ் வாதிகள் சரியானபடி நடந்துகொள்ளத் தவறிவிட்டனர்."

—ராஜேந்திர பிரசாத்,
22—5—49.

* * *

"மந்திரிகள் யாவரும், அவர்கள் மீது கூறப்படும் குற்றச் சாட்டுக்களை நன்கு உணர்ந்தேயிருக்கின்றனர். ஆனால் மந்திரிகளிடம் ஊழல்களிருப்பதாகவும், தங்கள் உறவினர்க்கும், வேண்டியவர்களுக்கும் இவர்கள் சலுகை காட்டுகிறார்கள் என்பதாகவும கூறப்படுவது சில சமயங்களில் மிகைபடுத்திக் கூறப்படுகிறது. சிலர் குறை கூறுவதுபோல் ஊழலும், மற்றத் தீங்குகளும் அவ்வளவு ஒன்றும் நிறைந்து கிடக்கவில்லை. இம்மாதிரி லஞ்சமும், ஊழலும் காணப்படுவதற்குக் காரணம், போர்க் காலத்தில் உண்டாக்கப்பட்ட கட்டுப்பாடு போன்ற நிர்வாக முறைகளேயாகும். பிரிட்டனைத் தவிர, உலகில், வேறெந்த நாட்டிலும் இதை அறவே ஒழிக்க முடியவில்லை."

—பண்டித நேரு. 22—5—49

* * *

"லஞ்சஊழல்கள்பற்றிக்காங்கிரஸ் வாதிகள் தங்களிடம் கொண்டுவரும் புகார்களைப்பற்றி ஆட்சியிலிருப்போர் சரியானபடி கவனம் செலுத்துவதில்லை என்று உறுதியாகக் கூறுவேன். சர்க்கார்,கஷ்டங்கள் ஏற்படும் போதெல்லாம் காந்திஜீயின் உபதேசங்களை எடுத்துக்கூறுகின்றனரேயன்றி, எந்த விஷயங்களிலும் அவற்றைப் பின்பற்றுவதில்லை. காந்திஜி தன் தவறுகளை ஒப்புக்கொண்டார். அதுபோலச்சர்க்காரும் காந்திஜியின் உபதேசங்களைப் பின்பற்றினால் தங்கள் தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும்."

—ஆசார்ய கிருபளானி 22-5-49.

* * *

"நமது நாடு இப்பொழுது ஒரு வித விடுதலையைப் பெற்றிருக்கிறது. அவ்விடுதலை விரைவில் முழுமை எய்தல் வேண்டுமென்று எவரும் விரும்புவர். முழு விடுதலையை நல்கும் ஆற்றல் சமதர்மத்துக்கே உண்டு. அந்தத் தர்மத்துக்குப் பண்பட்ட நிலம் தென்னாடு என்பது எனது ஆராய்ச்சியிற் போந்த உண்மை. சமதர்ம விதை முதல் முதல் தென்னாட்டில் விதைக்கப் படின், பெருநலம் விளையும். அந் நலம் வடநாட்டை வயப்படுத்தித் தன்வண்ணமாக்கும் என்பது எனது நம்பிக்கை. இதனால் இந்தியாவில் சமதர்மம் இன்பத்தேன் பிலிற்றும் நிலை ஏற்படலாம். இந்திய அரசாங்கம் தென்னாட்டிற்கு ஒரு வாய்ப்பை அளித்துப் பார்க்க எண்ணுமா? எண்ணின், இந்தியா விரைவில் முழு விடுதலை அடையும்."

—திரு. வி. க. 18—5—49.

* * *

"தற்பொழுது நடைபெற்றுவரும் நகரசபை ஆட்சி சுய ஆட்சி அல்ல. வரி ஆட்சிதான் தற்பொழுது நடக்கிறது. ஒவ்வொரு நகரத்திலும் சுயஆட்சி நடக்கிறது என்றால் மக்களிடமிருந்து வரியே வசூலிக்கக் கூடாது. வரி வசூல் செய்யாமலே நகர சபைகளை நடத்த வழி இருக்கிறது. அதாவது நகரிலுள்ள சினிமாக் கொட்டகைகள், காபி ஹோட்டல்கள், கடைகள், பஸ் சர்வீஸ்கள் முதலிய மற்றத்தொழில்களையும் நகர சபையினரே எடுத்து நடத்தினால், தற்பொழுது வியாபாரிகளுக்குக் கிடைத்துவரும் வருமானம் நகரசபைக்குக் கிடைத்து விடும். அவ்வருமானத்தை வைத்துக்கொண்டு இன்னும் சிறப்பாகவே நகரசபைகளை நடத்தலாம்."

—பெரியார் ஈ. வே. ரா.
24—5—49

* * *

"சீக்கிய மதத்தில் தீண்டாமையே கிடையாது. அவர்களுக்குள் வேறுபாடும்பாராட்டப்படுவதில்லை. இந்து சமூகத்தில் தீண்டாமை போன்ற சில கொடிய பழக்கவழக்கங்கள் எவ்விதம் புகுந்ததோ அதேபோல் முற்போக்கான சீக்கிய மதத்திலும் நாளாவட்டத்தில் ஓரளவு சில கெட்ட பழக்கங்கள் தலைகாட்டத் தொடங்கிவிட்டன."

—சர்தார் பட்டேல்
25—5—49.

## சந்தாதாரர்களுக்கு

"திராவிடநாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுதவேண்டும். சந்தாஎண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர்.

# ஏக்கம் தீர மருந்து.

தீட்டும் திட்டங்களை நிறைவேற்ற, மாகாண அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லை. வரியாக வரும் வருமானத்தின் பெரும்பகுதி, மத்திய அரசாங்கத்திடம் சென்று சேர்கிறது. மத்திய அரசாங்கத்தின் தயவை எதிர்பார்த்து, மாகாண அரசாங்கம் வாழவேண்டியிருக்கிறது. ஆகவே, மாகாணத்திற்கென்று ஒதுக்கும் தொகையின் விகிதத்தைச் சற்று அதிகமாக்கிக் கொடுத்தால்தான், எண்ணும் செயல்களை ஈடேற்றிவைக்க முடியும்.

என்னும் கருத்துப்பட சென்னை நிதி மந்திரி தோழர் பி. கோபால் ரெட்டியார், அண்மையிலும், அதற்கு முன்பு பலதடவைகளிலும் பேசியுள்ளார். சட்டமன்றத்தில், வரவு — செலவுத் திட்டத்தை வகுத்து, அவையோர் முன்வைத்து, அதுபற்றிச்சொற்பொழிவு நிகழ்த்தும்போதும் இக்கருத்தை அவர்வலியுறுத்தியிருக்கிறார்.

இதனால், சென்னை மாகாணத்திலிருந்து கிடைக்கும் வரியின் பெரும்பகுதி, மத்திய அரசாங்கத்திற்குப் போய்விடுகிறது என்பதும், அதனிடம் கெஞ்சிக்கேட்டு, அது கொடுக்கஇசையும் பொருளைப்பெற்று, அதனைக்கொண்டுதான், மாகாண அரசாங்கம் தன்னுடைய திட்டங்களை ஆற்றிவைக்கவேண்டிய அவசியத்திலிருக்கிறது என்பதும், இற்றைப் பொழுது, மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கத்திற்குக் கொடுத்துவரும் தொகை, போதுமான அளவினதாக இல்லை என்பதும், மந்திரியாரின் கூற்றுக்களிலிருந்து தெரியவருகின்றன. மாகாண வரியின் பெரும்பகுதி, மத்திய அரசாங்கத்திடம் சேரும்படியான நிலைமையையும், அப்படிச்சேர்ந்தபொருளிலிருந்து பங்குபெற, கெஞ்சிக் கேட்டு நிற்கும்படியான நிலைமையையும்மாகாணம்ஏன் அனுமதிக்கவேண்டும்? பெரும் பொருளைச் சேர்த்துக் கொடுப்பானேன், பின் கெஞ்சிக் கேட்டு நிற்பானேன்? வரவு—செலவு செய்யும் அதிகாரம், அதாவது ஆட்சிமுறை, சென்னைமாகாணத்திடம் அதாவது திராவிடத்திடம் அமைந்திருக்குமேயானால், மேற்கூறிய கேவலநிலை இங்கு ஏற்பட்டிருக்காது. நாட்டின் நிதிமந்திரியார் வடக்கு நோக்கி 'தவங்'கிடந்து, அங்கலாய்த்து', புலம்பிநிற்கவேண்டிய அவசியமுமேற்பட்டிருக்காது.

நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்தக்கூடிய — வளர்க்கக்கூடிய அமைப்புகளெல்லாம், இன்றைய நிலையில், மத்திய அரசாங்கத்தின் ஆளுகையின்கீழ் விடப்பட்டிருக்கின்றன. வளரக்கூடிய—வளர்க்கக்கூடிய வரிகளானவை மத்திய அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டு வருகின்றன. ஏற்றுமதி — இறக்குமதி வரி, சுங்க வரி, சுரங்க வரி, ரயில்வே போன்ற போக்குவரத்துச் சாதனவரி, தபால் தந்தி வரி, பெருந்தொழிற்சாலை வரி போன்ற பல்வேறு வரிகள், மத்திய அரசாங்கத்திற்குச் சென்று குவிகின்றன. இந்த அமைப்புகளெல்லாம் வளர வளர வரிவிதிப்பின் அளவும் வளரும்; அதனால்வருமானமும் அதிகரிக்கும். ஆனால், மாகாண அரசாங்கங்கள் வசூலிப்பதற்கென்று விடப்பட்டவரிகளில் முக்கியமானது நிலவரி. இது வளரக்கூடிய அல்லது வளர்க்கக்கூடிய வரியல்ல; குறிப்பிட்ட அளவில் நிரந்தரமாக வந்து கொண்டிருக்கக்கூடிய வரியாகும். சிலகாலங்களில், பருவ மழையின்றி விளைச்சல் குன்றிவிடுமேயானால், நிலவரியின்மூலம் கிடைக்கும் வருமானமும் குறைந்துபோக நேரிடும். இதுவன்றி, அதிக அளவு வருமானம் பயக்காத விற்பனைவரி போன்ற சில்லறைவரிகள் தாம் மாகாண அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாக இருக்கின்றன. குறைந்த வருமானம் தரக்கூடிய வரிகளையே மாகாணம்கொண்டிருப்பதால், தன்தேவை முழுவதையும், தன்விருப்பம்போல் நிறைவேற்றிக்கொள்ள இயலாததாக இருந்து வருகிறது மாகாண அரசாங்கம். சென்னை மாகாணம் அதாவது திராவிடம், தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமானால், தன்னிடத்திலே கிடைக்கும் வருமானம் தன்னைவிட்டுச் சிதறிப் போகாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அந்நிலை ஏற்படவேண்டுமாயின், திராவிடம் மத்திய அரசாங்கத்தோடு கொண்டிருக்கும் தொடர்பை அறுத்துக்கொண்டு, தனித்து நின்று ஆட்சி செய்யமுற்பட்டால்தான் இயலும். இந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டுதான், திராவிடர் கழகத்தினர் "திராவிடநாடு திராவிடர்க்கே" என்ற பிரிவினை முழக்கத்தை முழங்கி வருகின்றனர். நிதிமந்திரி தோழர் கோபா..ரெட்டியார், தற்பொழுது, நிலைமையை உணர்கிறார் என்று தெரிகிறது; ஆனால் நிலையைச் சீர்படுத்துவதற்காகக் கொள்ளக்கூடிய நெறியை இன்னும் அவர் உணரவில்லை! உணர இப்பொழுது மறுக்கிறார்!

குறிப்பாக, சென்னை மாகாணத்தின் அதாவது வளம் மிகுந்த திராவிடத்தின், பொருளாதார நிலை உயரவேண்டுமானால், இங்கு பல்வேறு தொழில் வளங்கள் பெருகவேண்டுமென்று அடிக்கடி எடுத்தியம்பி வருகின்றோம். திராவிடம் வடநாட்டோடு இணைந்திருக்கும் காரணத்தால், இங்கு தொழில் வளம் பெருகவொட்டாமற் செய்வதற்கு மத்திய அரசாங்கத்தால் இயலுவதாகிறது. சேலத்திலும், ஆந்திராவைச் சேர்ந்த சாந்தூரிலும் இரும்புச் சத்துக்கள் கிடைக்கும், இங்கு மின்சார உதவியால் எஃகு— இரும்புத்தொழிற்சாலைகள் தோற்றுவிக்கமுடியும் என்று அறிஞர்கள் கூறியபிறகுங்கூட, ஒரிசா மாகாணத்திலேயே இரும்புத் தொழிற்சாலைகளை நிறுவ, மத்திய அரசாங்கம் முனைந்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டு அமெரிக்கக் கம்பெனிகளின் நிபுணர்களும், ஒரு ஆங்கிலக் கம்பெனியின் நிபுணர்களும், சிறிது சிறிது குறைந்த செலவில் ஒரிஸாவில் இரும்பு உற்பத்திச் செய்ய முடியும் என்று கூறிய காரணத்திற்

காக, ஆரம்பிக்க எண்ணும் தொழிற்சாலைகளை வடநாட்டின் கண்ணேயே ஆரம்பிக்கப்போவதாகத்தெரிகிறது. நிலைமை அப்படியானால், தென்னாட்டுப் புதைச்சத்துக்கள் என்னாவது? ஏன் புறக்கணிக்கப்படவேண்டும்? தென்னாடு வடநாட்டோடு இணைந்திருக்கிற காரணத்தினாலல்லவா, தென்னாடு, தான் பெறவேண்டிய வாய்ப்புகளையெல்லாம் இழந்து நிற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது!

தென்னாடு—திராவிடம் பிரிந்தால், இங்கு நம் விருப்பப்படி தொழிற்சாலைகளை நிறுவமுடியும்; தேவையான சாமான்களை உற்பத்தியாக்க முடியும்; அவைகளை ஏற்ற விலை வைத்துவிற்க முடியும்; நம்விருப்பப்படி வெளிநாடுகளுக்கு, அவைகளின் தேவைக்கேற்றபடி அனுப்பிவைக்க முடியும்; பிற நாட்டுத் தொழில்கள் உள்நாட்டுத் தொழில்களைப் பாதிக்காமல் தடுக்கமுடியும்; வேலையற்ற எண்ணற்ற மக்களுக்கு வேலைதேடித் தரமுடியும்; நாட்டின் வருமானத்தைப் பெருக்க முடியும்; ஆட்சியைச் செவ்வனே நடத்த முடியும்; அப்பொழுது மத்திய அரசாங்கம் என்ற ஒன்றை எதிர்பார்த்து நிற்கவேண்டிய அவசியம் மாகாண அரசாங்கத்திற்கு ஏற்படாது!

வரியால் வரும் வருமானம் கிடைக்கவில்லையே என்று மாகாணம் ஏங்கும் ஏக்கத்தைத் தீர்க்கும் ஒரே மருந்து, திராவிட நாட்டுப் பிரிவினையேயாகும். எனவேதான், நிலைமையையுணரும் நிதிமந்திரியாரைச் சீர்திருந்தும் நெறியையும் உணர்ந்துகொள்ளச் சொல்லுகிறோம்!

●

## "இரமண விஜயம்"

4-ம் பக்கத் தொடர்ச்சி

'**விதை**யிலிருந்து ஆலமரம்வளருகிறது; அதுபோல, ஏதோ ஒருவித சக்தியிலிருந்து பிரபஞ்சம் வளர்ந்துள்ளது' என்று கூறப்படுமேயானால் இதைச் சந்தேகிப்பவர் யாரும் இல்லை. 'வெறும் சூன்யத்திலிருந்து பிரபஞ்சம் உண்டாகியிருக்க முடியாது' என்று ஆச்சாரியார் வலியுறுத்தும் கருத்தையும் யாரும் சந்தேகிக்கவில்லை!

**விதை** ஆலமரமாகவளர்கிறது என்பதையாரும் சந்தேகிக்கவில்லை; ஆனால் விதை ஓரிடத்தில் உட்கார்ந்துகொண்டு, ஆணிவேரையும், அடிமரத்தையும், கிளையையும் இலையையும், பூவையும், காயையும் கனியையும் தன் கண்காணிப்பில் வைத்துக்கொண்டு வளர்க்கிறது என்று யாரேனும் கூற முற்படுவாரேல் அவர் கூற்றைத்தான் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. விதைதான் மரமாய், கிளையாய், இலையாய், பூவாய்க், காயாய்க், கனியாய் வளர்கிறது என்பதில் சந்தேகப்படவில்லை; விதை தனியே யிருந்துகொண்டு ஒவ்வொன்றையும் தன் இச்சைப்படி உண்டாக்குகிறது என்று கூறுவார்களேயானால், யாரும் சந்தேகிக்கத்தான் செய்வர். விதை நினைத்தால் மரத்தையும், கனியையும் உற்பத்தியாக்கி, இலையையும் பூவையும் உற்பத்தியாக்காமல் இருக்கமுடியும் என்று யாரும் சொல்லமுடியாது. விதை தனியே இருந்துகொண்டு ஒவ்வொன்றையும் தானே நேரிடையாக உண்டாக்கவில்லை என்கிறோம்; விதையேஒவ்வொன்றாகவளர்ந்துநிற்கிறது என்கிறோம்.

அதுபோல, ஏதோ ஒருவித சக்தி, அது ஒன்றோ பலவோ, பிரபஞ்சமாய் வளர்ந்திருக்கிறதேயொழிய, அது தனியே இருந்துகொண்டு தன் இச்சைப்படி ஒவ்வொன்றையும் சிருஷ்டித்துக் கொண்டிருக்கவில்லை. சக்தியே பிரபஞ்சமாக வளர்ந்திருக்கிறது என்ற கூற்றை யாரும் சந்தேகிக்கவில்லை; ஆனால் சக்தி தனியே இருந்துகொண்டு பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பாகத்தையும் சிருஷ்டி செய்து கொண்டிருக்கிறது என்ற கூற்றை நாம் சந்தேகிக்கிறோம்; அறிஞர்கள் எல்லோரும் சந்தேகிக்கிறார்கள்.

ஆச்சாரியார் கூறும் வாதத்திலுள்ள உபமானமும், உபமேயமும் ஒன்றிற்கொன்று பொருந்தவில்லை. ஆலவிதையை உபமானமாக உணர்த்தி, அதிலிருந்து மூல சக்தியாகிய உபமேயத்தை உணரவைக்கிறார். ஆலமரத்தை உபமானமாக உணர்த்தி. அதிலிருந்து பிரபஞ்சமாகிய உபமேயத்தை உணரவைக்க எண்ணுகிறார். விதையிலிருந்து மரம் உண்டாகிறது என்று சொல்லி, அதுபோல மூலசக்தியுலிந்து பிரபஞ்சம் உண்டாகிறது என்று சொலியிருக்க வேண்டும். ஆனால் ஆச்சாரியார் அப்படிச் சொல்லாமல், விதையிலிருந்து மரம் உண்டாகிறது என்ற உபமானத்தைக் காட்டி, இதுபோல், என்று சொல்லி, 'சக்தி' பிரபஞ்சத்தின் ஒவ்வொன்றையும் சிருஷ்டிக்கிறது என்கிறார். ஆகவேதான் ஆச்சாரியார் [illegible] உபமேயம் பொருந்தவில்லை — இயற்கையுமல்ல— சந்தேகத்திற்கு இடமளிப்பது — குருட்டு நம்பிக்கையின் பாற்பட்டது என்கிறோம்.

ஏதோ 'சக்தி' தானே பிரபஞ்சமாய் வளர்ந்து நிற்கிறதென்றால், சந்தேகப்படுவாரில்லை— அதைப்பற்றிக் கவலைப்படுவாரும் இருக்கவேண்டிய அவசியமில்லை.

எல்லாவற்றையும் தனித் தனியே உண்டாக்க — தனித் தனியே கவனிக்க—தனித் தனியே பாதுகாத்த தலைத்தழிக்க ஒன்று இருக்கிறது என்றும், அதைப்பற்றி சந்தேகப்படக்கூடாது என்றும் ஆச்சாரியார் கூறுவாரேயானால் — ஒவ்வொன்றையும் உண்டாக்க ஒருகர்த்தா இருக்க வேண்டும், அந்தக் கர்த்தாதான் 'கடவுள்' என்று கூறமுற்படுவாரேயானால், அந்தக் கடவுளை உண்டாக்கிய கர்த்தா யார் என்று சுயமரியாதைக்காரன் கேட்க முற்படுகிறான். ஆச்சாரியார் ஆர அமர யோசித்துப் பதில் கூறட்டும்! அவருடைய குரு இரமணர் தானாகட்டும் சிந்தித்துப் பதில் தெரிவிக்கட்டும்!

இவ்வளவையும் தெளிவாக அறிந்துள்ள காரணத்தால் தான், 'இரமண விஜயத்தால்' மனிதசமுதாயத்திற்குத் தினையளவு நன்மையாவது உண்டா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படியாக — ஆச்சாரியாரை அல்ல—இரமணரையுங்கூட அல்ல — பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்—சிறப்பாகப் பக்த கோடிகளைக் கேட்கிறோம்!

●


## விளம்பரம்

எங்களிடம் "திராவிட நாடு" பத்திரிகையும், C. N. A. எழுதிய நூல்களும், பெரியார், அண்ணாதுரை, கவிஞர் படங்களும் எப்போதும் கிடைக்கும். அன்பர்கள் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறேன்.

**ஆழ்வார் நியூஸ் மார்ட்,**
பாளையங்கோட்டை.

# படிப்பகம்

## பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பகுதி

ஆசிரியர்:- பாரதிதாசன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால், ஏறத்தாழ இருபது ஆண்டுகாலமாகப் பல்வேறு ஏடுகளிலும் எழுதப்பட்டுச், சிதறுண்டு கிடக்கும் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். இதற்கு முன்பு வெளியிடப்பட்டுள்ள 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூலில் பல அருங்கவிதைகள் இடம் பெற்றன; அந்நூலில் வரப்பெறுமல், ஆனல் அவை போன்று சிறந்தனவாய் மிளிர்ந்து, எஞ்சிநிற்கும் கவிதைகள் பல இந்நூலின்கண்ணே இடம் பெறுகின்றன. கவிதைகள், சிறுகாப்பியம்-வாழ்க்கை—தமிழன்—பாரதி—திராவிடநாடு—காதல்— பன்மணித்திரள்—இயற்கை என்ற தலைப்புகளின் கீழே குவிக்கப்பட்டிருக்கின்றன. புரட்சிக் கவிஞரின் பாடல்கள் தெவிட்டாத் தேன் துளிகள் என்பதை நாடு நன்கறியும். அத்தகையத் துளிகளின் கூட்டுதான் இந்நூல்.

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

விலை ரூ. 1—4—0

• • •

## அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி

ஆசிரியர்:- காஞ்சி. கல்யாணசுந்ரம்.

இது ஒரு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு நூல். மறைந்த மாவீரர் கே. வி. அழகர்சாமி அவர்களோடு நெருங்கிப் பழகிய காலத்தில் தாம் கண்டவற்றுள், சில குறிப்புக்களை இச்சிறுநூலின்வாயிலாகச் செம்மையுறச் செப்புகிறார் ஆசிரியர். அழகர்சாமி அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்ற ஒரு சிலரிலே, இந்நூலின் ஆசிரியரும் ஒருவரானபடியால், பல அரிய உண்மைக் கருத்துக்களைக் கண்டறிய இந்நூல் சிறந்த வகையில் பயன்படுவதாகும். இந்நூல் எளிமையும், தெளிவுங்கொண்ட நடையில் இயற்றப்பட்டுள்ளது.

பெறும் இடம்:— அறிவுப்பண்ணை 6, மங்கம்மாள் தெரு, மிண்ட் போஸ்ட், சென்னை 1.
விலை அணா 8,

* * *

## புரட்சி இலக்கியம்

ஆசிரியர்:- சாமி பழனியப்பன்.

இது ஒரு சிறு கட்டுரை நூல். இலக்கியத் துறையிலே இன்றுள்ள நிலை மாற்றியமைக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை, ஆசிரியர் இந்நூலின் வாயிலாகத் தெளிவாக்கிக் காட்டுகிறார்.

பெறும் இடம்:— எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி மாவட்டம். விலை அணா 3

* * *

## தமிழச்சியின் கத்தி

ஆசிரியர்:- பாரதிதாசன்

இந்நூல் ஒரு கவிதைக் காப்பியம். வடநாட்டவரின் இழிதகு பண்புகளை எடுத்துக்காட்டித், தமிழர்தம் மாண்புறு பண்புகளை விளக்கிக் காட்டும் வகையில் மறச்செயல் புரியும் வீரமகள் ஒருத்தி, இந்நூலின் மூலமாகக் கவிஞரால் அறிமுகப்படுத்தப்படுகிறாள். அந்த வீரநங்கை கவிஞரின் கற்பனை உள்ளத்தில் உதித்தெழுந்தவள்தான், எனினும், சரிதந் தழுவிய மாதிரியில் அருமையாக உருவாக்கப் பெற்றிருக்கிறாள். தேனில் துவைத்தெடுத்த செந்தமிழ்ச் சொற்கள்; விறுவிறுப்பைத் தரும் நடை; அழகிய புதுப்புது உவமைகள்; எழில் ததும்பும் கற்பனைகள்; ஒளி உமிழும் உயர்ந்த கருத்துக்கள் ஆகிய இவை, இந்நூலின்கண் புதைந்து கிடக்கும் செல்வங்களாகத் திகழ்கின்றன. 'பாண்டியன் பரிசு' போன்று சிறந்து விளங்கும் செந்தமிழ்க் காப்பியமாகும் இந்நூல்.

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.
விலை ரூ. 1—0—0

• • •

## அபேத வாதம்

ஆசிரியர் :- ச. இராசகோபாலாச்சாரியார்.

இது ஒரு கருத்து விளக்க நூல். அபேதவாதத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கிக் காட்டி, அவற்றினல் ஏற்படும் விளைவுகளைத் தமக்கே உரிய போக்கில் விளக்கிக் காட்டுகிறார் அன்பர் ஆச்சாரியார். இறுதியில் அபேதவாதக் கொள்கை உலகெங்கும் வெற்றி பெறும் என்பதையும் உணர்த்துகிறார்.

பெறும் இடம்:— சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை.
விலை ரூ. 1—0—0

* * *

## காந்தியும் வள்ளுவரும்

ஆசிரியர்:- ராய. சொ.

வள்ளுவர் சொல்லியவற்றோடு காந்தியாரின் செயல்கள் எவ்வெவ் வகையில் ஒட்டியிருக்கின்றன என்பது இந்நூலால் உணர்த்தப்படுகிறது. திருக்குறளுள் நூற்றுஇருபத்தைந்துபாக்களை எடுத்துக் காந்தியத்தோடுஇணைத்துமேல்இரண்டுவரிகள் பாடி, குறள் வெண்பாவை நேரிசை வெண்பாவாக்கி, விளக்கந் தந்துள்ளார் ஆசிரியர்.

பெறும் இடம்:— பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி.
விலை ரூ. 1—8—0

* * *

## மதித்தலைவர் பெரியார்

ஆசிரியர் : 'தோழன்'

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமியைப் பழி தூற்று

வதே தம் பணி என்று கருதி வரும் ஒருவரால், வெளியிடப்பட்டுள்ள 'மடத் தலைவர் பெரியார்' என்ற சிறு ஏட்டிற்கு மறுப்பு கூறுமுகத்தான், எழுந்ததே இச்சிறு நூலாகும். மாற்றான் வெட்கித் தலை குனியும் வண்ணம், இதன் ஆசிரியர் தம் கருத்தை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

பெறும் இடம்:— அறிவுப் பண்ணை, 6, மங்கம்மாள் தெரு, மிண்ட் போஸ்ட், சென்னை 1. விலை அணா 4.

* * *

## சேர தாண்டவம்

ஆசிரியர் : பாரதிதாசன்.

இது ஒரு உரைநடைக் காப்பியம். சங்க இலக்கியங்களில் புகழ்ந்துரைக் கப்படும், ஆடற் கலையில் வல்ல ஆட்டனத்தி என்பானைக், காப்பியத் தலைவனாகக் கொண்டு எழுந்தது இக்காப்பியம். சங்கச் செய்யுட்களில் காணும் சரிதந் தழுவி, இக்கற்பனைக் காவியம் செல்லுகிறது. ஆட்டனத்தி—ஆதிமந்தி காதலுள்ளங்கள் கவிஞரால் அழகுற விதந்தோதப் படுகின்றன. அழகிய - இனிய - எளிய - சிறந்த — செந்தமிழ்ச் சொற்களாலான இவ்வுரைநடைக்காப்பியம் சிந்தைக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளது.

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி. விலை ரூ. 1—4—0.

* * *

## பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்.

ஆசிரியர் :— எஸ். சதாசிவம்.

பெரியார் — கவிஞர் — அண்ணா ஆகிய மூவரையும் பற்றிய சிறு குறிப்புகள் இந்நூலின்கண் கூறப் படுகின்றன. இம்மூவரையும் தமிழ் நாட்டவர்களின் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்தவே இந்நூலைத் தாம் எழுதியுள்ளதாக ஆசிரியர் விளம்புகிறார். அழகிய நடையில் இந்நூல் அமைந்துள்ளது.

பெறும் இடம் :— இன்ப வாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம்; கோயமுத்தூர். விலை அணா 8.

## சிரிக்கும் வையம்

ஆசிரியர் : சாமி பழனியப்பன்.

இது ஒரு சிறு கவிதை நூல். வேண்டாத இந்தியைப் புகுத்தித், தாய் மொழியைச் சிதைக்க முனையும் விபரீதப் போக்கினரின் சதித் திட்டத்தை, உடைத்தெறியும் ஆற்றலை இளைஞர் உலகம்பெறவேண்டும் என்ற கருத்தோடு, இந்நூல் உணர்ச்சியின் பெருக்காய், ஆசிரியர் உள்ளத்தினின்றும் வழிந்தோடி வந்துள்ளது.

பெறும் இடம் :— சுடரொளி நிலையம், பொ. புதுப்பட்டி, புதுக் கோட்டை. விலை அணா 4.

* * *

## படித்த பெண்கள்

ஆசிரியர் :— பாரதிதாசன்.

இது ஒரு உரைநடை நாடகநூல். பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாகத் திகழவேண்டும் என்பது இந்நூலால் வலியுறுத்தப்படுகின்றது. "படித்த பெண்கள் இந்நாட்டிற்கு இன்றியமையாதவர்கள், பெண்கள் அனைவரும் படிக்கவேண்டும், அவர்கள் ஆண்களொடு சரிநிகரானவர்கள் —என்பனவற்றை விளக்க இதை எழுதினேன். நன்றாய் விளக்க வேண்டும் என்று இதை நாடகமாக அமைத்தேன்" என்று புரட்சிக் கவிஞர் கூறுகிறார். கவிஞரின் உரைநடை தனியழகு பெற்றது என்பது தான் யாவரும் அறிந்ததாயிற்றே!

பெறும் இடம் :— பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி. விலை ரூ. 1—4—0.

## 'இந்தியாவின் மொழிப் பிரச்சினை'

ஆசிரியர்:— கா. அப்பாத்துரை, எம். ஏ; எல். டி.

இது ஆங்கிலத்தில் இயற்றப்பட்டுள்ள ஒரு அரிய ஆராய்ச்சி நூல். பொது மொழி — தேசிய மொழி— பிரதேச மொழி — தாய் மொழி முதலிய பல்வேறு பிரச்சினைகளையும் நடுநிலை நின்று, இந்தியாவிலுள்ள மொழிகளைக் குறித்து ஆராய்ந்துள்ளார். ஆசிரியர் தமிழ், ஆங்கிலம், இந்தி முதலிய மொழிகளில் தேர்ச்சி பெற்று பட்டம் பெற்றிருப்பதோடு, ஏனைய மொழிகள் சிலவற்றையும் அறிந்திருப்பவராவார். பேராசிரியர் மறைமலையடிகளார் இந்நூலுக்கு அழகிய ஆராய்ச்சி வாய்ந்த அணிந்துரை நல்கியுள்ளார்.

பெறும் இடம்:— தமிழ் இந்தியா பப்ளிகேஷன்ஸ், அருணாசல ஆசாரித் தெரு, சென்னை 5. விலை ரூ. 2—8—0.

* * *

## காமராஜர்

ஆசிரியர்:- ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

பெறும் இடம்:- தீச்சுடர் நிலையம், சிறுகனூர், திருவானைக்காவல் வழி, திருச்சி மாவட்டம். விலை அணா, 5.

* *

## பெரியார் பொன்மொழிகள்

தொகுத்தவர்:- "குமுதம்"

பெறும் இடம்:- திராவிடன் பதிப்பகம், P. B. 18, வேலூர் (வ. ஆ.) விலை அணா, 3.

* * *

## வஞ்சகப் பெரியார்!

ஆசிரியர்:- பி. வி. லிங்கம்

பெறும் இடம்:- அழகிரிசாமி நூல் நிலையம், திருவாரூர். விலை அணா 3.

* * *

## ஒழியட்டுமே? கருஞ்சட்டை!

ஆசிரியர்:- கோவல்கிழார்

பெறும் இடம்:- சிலப்பதிகார மன்றம், கள்ளக்குறிச்சி. விலை அணா, 4.

* * *

## அழகை

ஆசிரியர்:- ல. சேதுராமன்

பெறும் இடம்:- சேது பதிப்பகம், கரூர். விலை அணா, 10.

* * *

## கல்லறை

ஆசிரியர்:- மெய்கண்டான்

பெறும் இடம்:- வாழ்க்கை மாணிக்கைப் பதிப்பகம், சென்னை. விலை ரூ. 1—2—0

—*—

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street, Kancheepuram.